வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 14.02.2022 திங்கட்கிழமை இதழ் : 71 பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# தமிழீழ விடுதலை புலிகள் தனிநாட்டை கோரவில்லை!

## த. தே. ம. முன்னணியின் கஜேந்திரன்



யாழ்ப்பாணம், பெப். 14

தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்தம் தனி நாட்டுக்கானது அல்ல. தமிழ் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்கானதே என்று கூறியிருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்.

15

## தனிநாட்டை விட்டுக்கொடுக்க புலிகள் தயாராகவே இருந்தனர்!

### மன்னிப்பு அறிக்கையிலும் கஜேந்திரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 14

“சர்வதேச மத்தியஸ்தத்துடன் இடம்பெற்ற பேச்சுக்களின்போதும் தமிழ்த் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கக்கூடிய தீர்வை அரசுத்தரப்பு முன்வைத்தால் பரிசீலிக்கத் தயார் என்பதனை வெளிப்படுத்தி இதயசுத்தியுடன் செயல்பட்டு வந்தார்கள்” அத்துடன், “நான் கூறிய கருத்துக்களானவை, விடுதலைப் புலிகள் தனிநாட்டுக்காக போராடவில்லை என தவறாக அர்த்தப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. தெளிவற்ற வகையில் அந்தக் கருத்து வெளிவந்தமைக்காக நான் மனம் வருந்துகின்றேன். அதன் காரணமாக மனவேதனைக்கும், மன உளைச்சலுக்கும் உள்ளான தமிழ்த் தேசியபற்றாளர்களிடம் நான் மன்னிப்புக்கோருகின்றேன்.”, என்றும் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுத்த நீண்ட மன்னிப்பு அறிக்கை அப்படியே வருமாறு,

“நேற்றைய தினம் (12-02-2022 - சனிக்கிழமை)

15

## 6 மணி நேர மின்வெட்டு நடைமுறைக்கு வரலாம்!

### மின்சார சபை எச்சரிக்கை

கொழும்பு, பெப். 14

நாட்டில் 6 மணிநேர தொடர் மின் துண்டிப்பை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமையில், தொடர் மழைவீழ்ச்சி கிடைக்காவிட்டால் ஏப்ரல் மாதமாகும்போது நீர் மின்உற்பத்திக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படுமென மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 6 மணி நேர தொடர் மின் துண்டிப்பை மேற்கொள்ளவதற்காக எச்சரிக்கை காணப்படுவதாக மின்சார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 13ஐ கோரும் கடிதத்தில் கையெழுத்திட சம்பந்தன், மாவை மிரட்டப்பட்டனரா?

### சந்தேகம் எழுப்புகிறார் சிறீதரன் எம். பி.



யாழ்ப்பாணம், பெப். 14

13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரி இந்தியப் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன், மாவை சேனாதிராசா ஆகியோர் கையொப்பமிடுவதற்காக மிரட்டப்பட்டார்களா அல்லது யாராவது ஏதும் சொன்னார்களா என்று தெரியவில்லை என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

டான் தமிழ் ஒளி தொலைக் காட்சியில் நேற்றிரவு 7 மணிக்கு ஒளிபரப்பான ஸ்பொட்லைற்

15

## சுகாதார, மின்சார சேவைகள் அத்தியாவசியமாக பிரகடனம்!

### வர்த்தமானி வெளியானது



கொழும்பு, பெப். 14

மின்சாரம் மற்றும் சுகாதார சேவைகள் தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில், மின்சார விநியோகம் சகல சேவைகள் அல்லது வேலைகள் நோயாளிகள் பராமரிப்பு, வரவேற்பு, உணவு மற்றும் சிகிச்சை, முதியோர் இல்லங்கள் மருந்தகங்கள் தொடர்புடைய அனைத்தும் சுகாதார சேவைக்குள் பொருந்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

1979ஆம் ஆண்டு 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் பிரிவு 2இன் பிரகாரம் தனக்கு வழங்கப்பட்டுள்ள

15

## பணிப் புறக்கணிப்பில் விமானிகளும் குதிப்பு!

கொழும்பு, பெப். 14

சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமான நிறுவனத்தின் விமானிகள் மன்றம் ‘நேரத்துக்கு மட்டும் வேலை’ தொழில்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

தமது கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வை வழங்க சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிர்வாகம் தவறிவிட்டதாகவும் அதனால் மீண்டும் தொழில்சங்க நட வடிக்கையில் ஈடுபட நேரிட்டதாகவும்மன்றத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கமைய, சிறீலங்கன் எயார்லைன் ஸின் விமானிகள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விமா

15

## பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைதானோரை விடுவியுங்கள்

### முஸ்லிம்களின் பேரவை வலியுறுத்து

லண்டன், பெப். 14

இலங்கையில் சுமார் 300 இற்கும் மேற்பட்டவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டிருப்பதுடன் அவர்களில் பெரும்பாலானோர் உரியவாறான சட்ட உதவிகளைக்கூட நாடமுடி யாத நிலையிலிருக்கின்றனர்.

அவர்கள் அனைவரையும் விடுவிப்பதுடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டிய தருணம் இது வாகும் என்று பிரிட்டனைத் தளமாகக் கொண்டியங்கும் இலங்கை முஸ்லிம்

15

## ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கடும் பிரேரணைக்கு பிரிட்டன் தயார்!

லண்டன், பெப். 14

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு கடுமையான பிரேரணையைக் கொண்டு வருவதற்கு பிரித்தானியா தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பிரேரணையை இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றவை எனக் கூறப்படுகின்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்கான பொறுப்புக்கூறலின் தாமத நிலை மற்றும் அண்மைய கால உரிமைகள் மீறல்கள் பற்றிய விடயங்களை உள்ளடக்கியதாக இருக் கும் என கொழும்பு இராஜதந்திர மட்டத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பிரித்தானியா கொண்டுவர

15

## கொரேனாவுக்கு 31 பேர் மரணம்!

கொழும்பு, பெப். 14

நாட்டில் நேற்றுமுன் தினம் கொரோனா தொற்றால் 31 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில், 30

15

## இப்படியும் நடக்கிறது…!

தமிழக மீனவர்கள் நமது கடல் வளங்களை சூறையாடுவது குறித்து அண்மைக்காலமாக பலரும் தத்தமக்குத் தெரிந்தவகையில் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

நேர்வேயில் வாழும் கவிஞர் தமயந்தி தெரிவித்திருக்கும் குறிப்பு ஒன்று இந்த ஊர்க்குருவியின் கவனத்தை ஈர்த்திருந்தது.

தமயந்தி தனது வாலிப காலத்திலிருந்து இலங்கை முழுவதும் உள்ள கடல்களை ‘உழுது’ வாழ்ந்தவர். அந்த ஒவ்வொரு கடலின் அடியிலும் என்ன வகையான செல்வங்கள் கொட்டிக்கிடக்கின்றன என்பதை அனுபவ வாயிலாக அறிந்தவர். நோர்வேக்கு புலம்பெயர்ந்த பின்னரும் கடலுக்குச் சென்று வருபவர்.

சில வேளைகளில் அல்ல, பல தடவைகளில் அவரது கடல்வளங்கள் பற்றிய கருத்துக்களை விளங்கிக் கொள்கின்ற அளவுக்கு நமக்கு அவைபற்றிய அறிவு இருப்பதில்லை.

தமிழக மீனவர்களின் இந்த அத்துமீறல் நீண்டகாலமாக நமக்கு நெருக்கடியைத் தந்துகொண்டிருந்தாலும், தமிழக அரசியலில் நமக்கு இருக்கும் ‘பிடிப்பு’ காரணமாக நமது தலைவர்கள் எவரும் இந்த விடயத்தைக் கண்டுகொள்ளவில்லை. தமிழகத்தின் பகையைச் சம்பாதிக்க நமது தலைவர்கள் விரும்பாததும் அதற்கு காரணமாக இருக்கலாம். ஆனால், அண்மைக்காலமாக இந்த அத்துமீறல்கள் அதிகரித்திருப்பதும், இதனால் நமது மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுவதும் மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியதையடுத்து பலரின் கவனமும் இப்போது இதன்மீது திரும்பியிருக்கின்றது.

இந்நிலையில், தமயந்தி தனது முகநூலில் தெரிவித்திருக்கும் கருத்து கவனத்திற்குரியது.

விஞ்ஞானத்துக்கு புறம்பான, சுற்றாடலுக்கு பெரும் சேதம் விளைவிக்கும் மடிவலை தடை செய்யப்படவேண்டும் என்று தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி வெளியிட்ட அறிக்கை குறித்து தமயந்தி இந்த குறிப்பை எழுதியிருக்கிறார். இந்த சர்ச்சைக்குரிய மடிவலை மீன்பிடி என்பது மீன்களை மாத்திரமன்றி, கடலுக்கு அடியிலே இருக்கும் ஒட்டுமொத்த கடல்வளத்தையுமே அள்ளிச்சென்று விடும் என்பதாலேயே இதனை தடைசெய்யவேண்டும் என்ற கோரிக்கையை நம்மவர்கள் முன்வைத்து வருகின்றனர். அதுகுறித்து சொல்லும் தமயந்தி,

இதனைச் சாத்தியமாக்கும் வல்லமையோ, விருப்பமோ எந்தத் தரப்பாரிடமும் இல்லையே என்று ஆதங்கப்படுகின்றார்.

ஏனெனில், இந்திய இழுவைப் படகுகளின் தாதா தமிழகத்தின் ஒரு முக்கிய அரசியல் பிரமுகர் என்று சொல்லும் தமயந்தி, இந்த இழுவைப்படகு முதலாளிகள் முதலில் செய்ததெல்லாம் தமிழகக் கடற்பரப்பை நாசமாக்கி, கட்டாந்தரையாக்கி, தமது பாரம்பரிய மீனவர்களையே பட்டினிச் சாவுக்குள் தள்ளியதுதான். இத்தகைய தமிழக அரசியல்வாதிகளும், முதலாளிமாரும் சேர்ந்துதானே எங்கள் கடலையும், வளங்களையும் சூறையாடுகிறார்கள்.

உண்மையிலேயே தமிழக அரசுகள் தமது மீனவர்கள் மீதும், கடல்வளங்கள் மீதும் கரிசனை கொண்டனவாக இருந்திருந்தால் இந்த நாசகார இழுவைப் படகுகளை எப்போதோ இல்லாமல் செய்திருப்பார்கள்.

எல்லைதாண்டியதாக இதுவரைகாலமும் இலங்கைக் கடற்படையால் இழுத்துவரப்பட்ட நூற்றுக்கணக்கான படகுகளில் இந்த அரசியல்வாதிகளின் படகுகள் ஏதாவது ஒன்று கொண்டுவரப் பட்டுள்ளதா, பாருங்கள்?

ஆக, நாடகங்கள் நன்றாகவே நடந்து கொண்டிருக்கின்றன. எல்லாவற்றுக்குமான தீர்வாக உள்ள நடவடிக்கை ஒன்றே ஒன்று மட்டும்தான்.

தமிழக அரசு இந்த நாசகார இழுவைப் படகுகளைத் தடை செய்யவேண்டும்.

அவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடிக்கான அத்தனை வள அனுகூலங்களும் இருக்கின்றன. எமது வடபகுதி மீனவர்களுக்கோ இந்தக் குடாக்கடல் மீன்பிடி மட்டும்தானே இருக்கின்றது….

இதுவே தமயந்தியின் ஆதங்கம்.

எல்லை தாண்டி மீனவர்கள் வருவதென்பது இன்று நேற்று நடப்பதல்ல. நாங்கள் பாதைமாறி இராமேஸ்வரம் கடற்கரையில் கரையொதுங்குவதும், தமிழக மீனவர்கள் நெடுந்தீவில் கரையொதுங்குவதும் ஆண்டாண்டுகாலமாக நடப்பதுதான். எல்லை தாண்டுவதல்ல பிரச்னை, அவர்கள் பயன்படுத்தும் மடிவலை மீன்பிடி முறைதான் இங்கே பிரச்னைக்குரியது. அதனை தடைசெய்வதென்பது சாத்தியமில்லாதது அல்ல. தமிழக அரசு நினைத்தால் அது சாத்தியமானதுதான். அதுவரை, அத்துமீறும் படகுகளையும் அதிலுள்ள கூலித் தொழிலாளிகளான மீனவத் தொழிலாளிகளையும் கைதுசெய்வது தீர்வாகப் போவதில்லை. இந்தக் கப்பல் உரிமையாளர்கள் மீதும் சட்டம் தன் கடமையைச் செய்யவேண்டும்.

**- ஊர்க்குருவி**

# பாராளுமன்று ஒழுங்கு புத்தகத்தில் பயங்கரவாததடைசட்டம்இணைப்பு

கொழும்பு, பெப். 14

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் கடந்த 11ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு திருத்தச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்பித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், இந்த புதிய திருத்தச் சட்டத்தின் மூலம் ஒருவரைத் தடுத்து வைக்கும் காலம் 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக குறைக்கப்படும்.

இதற்கிடையில், புதிய திருத்தங்கள் சட்டத்தின் கீழ் கைதிகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதற்காக தடுப்புக் காவல் நிலையங்களுக்குச் செல்ல நீதிவானை அனுமதிக்கும்.

புதிய திருத்தச் சட்டம் ஒரு சட்டத்தரணி தடுப்பு மையத்திற்குச் செல்வதற்கும், கைதிகள் தங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் வாய்ப்பளிக்கிறது.

சந்தேகநபர்கள் சித்திரவதைக்கு உள்ளாகவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்கு சாசனத்தின் 11 ஆவது பிரிவின் கீழ் தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னர் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஆஜர்படுத்துவதற்கான வாய்ப்பையும் புதிய திருத்தம் வழங்குகிறது.

இதேவேளை, தொழிலாளர் இழப்பீட்டுத் திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தின் சமீபத்திய ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் அது விவாதத்திற்கு எடுத்துக் கொள் ளப்படவுள்ளது. (ஐ)



# இலங்கைகடற்படையைகண்டித்து திரண்டனர் இந்திய மீனவர்கள்!

இராமேஸ்வரம், பெப். 14

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கும், இந்திய இழுவைப் படகுகள் ஏலம் விடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இராமேஸ்வரத்தில் பல நூறு மக்கள் திரண்டு ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட முயன்றனர்.இதனை பொலிஸார் தடுத்து நிறுத்தியமையால் மீனவர்களுக் கும் பொலிஸாருக்கும் இடையில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

கடந்த மூன்று நாட்களாக இராமேஸ்வரம் மீனவர்கள் தொழில் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹற்றன் நஷனல் வங்கியின் தலைவர் வடக்கில் பல நிகழ்வுகளில் பங்கேற்பு

யாழ்ப்பாணம், பெப். 14

ஹற்றன் நஷனல் வங்கியின் பணிப்பாளர் சபை தலைவர் திருமதி அருணி குணதிலக தனது வடக்குக்கான பயணத்தின் போது வங்கியின் வாடிக் கையாளர்களான தொழில் முயற்சியாளர்களை சந்தித்ததுடன், வங்கியின் கூட்டு சமூகப் பொறுப்புணர்வு செயல்திட்டங்கள் ஊடான உதவிகளையும் வழங்கி வைத்தார்.



கடந்த வியாழக்கிழமை வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்த அவர் இரண்டு நாள்கள் தங்கியிருந்தார்.

இதன்போது பணிப்பாளர் சபை தலைவர் திருமதி அருணி குணதிலகவின் தலைமையில் தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு நோயாளிகளுக்கு தேவையான கட்டில்கள் வழங்கி வைக்கப்பட்டன. ஹற்றன் நஷனல் வங்கியினால் புற்றுநோய் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து பல்வேறுபட்ட உதவிகள் சமூகப் கூட்டுப் பொறுப்பு செயற்திட்டத்தின் (CSR) கீழே வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், ஹற்றன் நஷனல் வங்கியின் மன்னார் கிளையால் மாந்தை மேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பினூடாக வலுப்பெற்று வரும் தொழில் முயற்சியாளர்களுக்கு கடன்கள் வழங்கி வைக்கப்பட்டன. அந்த நிகழ்விலும் பங்கேற்ற வங்கியின் பணிப்பாளர் சபைத் தலைவி மன்னார் மறைமாவட்ட ஆயரையும் சந்தித்தார்.

வடக்கில் உள்ள வங்கிக் கிளைகளுக்குச் சென்ற பணிப்பாளர் சபை தலைவர் திருமதி அருணி குணதிலக, தொழில் முயற்சியாளர்களை சந்தித்து கலந்துரையாடினார். (ஐ)

# மேலும் 290 பேர் குணமடைவு!

கொழும்பு, பெப். 14

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட மேலும் 290 பேர் குணமடைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை வீடுகளுக்கு திரும்பினர்.

இதனையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 95 ஆயிரத்து 28ஆக அதிகரித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
14.02.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், மாசி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# நாங்கள் மோதிக் கொண்டிருக்கும்போது!

எதை வலியுறுத்துவது, எவ்வாறு வலியுறுத்துவது - என்னும் விடயங்களில் தமிழ் கட்சிகள் தங்களுக்குள், முட்டி மோதிக் கொண்டிருக்கும்போது - மறுபுறம், தற்போதைய ஆட்சியாளர்களோ, ஒரு விடயத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். அதாவது, தமிழ் மக்களுக்கென்று பிரத்தியேகமான பிரச்னை எதுவுமில்லை என்பதை நுட்பமாக வலியுறுத்துவதே அவர்களின் இலக்காக இருக்கின்றது.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் - மீனவர் பிரச்னைதான், இந்தியாவுக்கும் இலங்கைக்குமான பிரதான பிரச்னையென்று இந்திய ஊடமொன்றிற்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டிருக்கின்றார். புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவரப் போவதாக கூறிவரும் அரசாங்கம் மறுபுறமோ, தமிழர்களுக்கு எந்தவொரு பிரச்னையும் இல்லையென்று கூறுவதில் மிகவும் கவனமாக செயல்பட்டு வருகின்றது.

யுத்தம் முடிவுற்று 12 வருடங்கள் கடந்துவிட்டது. இந்த இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் எட்டு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதில் ஏழு பிரேரணைகள் இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் பிரேரணைகளாகும். இவ்வாறானதொரு சூழலிலும் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான எந்தவொரு பிரச்னையும் இல்லையென்று சாதிக்கவே முற்படுகின்றது. தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சிறிய குழுவினர் 13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்த்துக் கொண்டிருக்கும்போது, 13ஆவது திருத்தச்சட்டத்தை பலப்படுத்துமாறு கூறுபவர்களும் இருக்கின்றனர். இதேவேளை அதனை பலவீனப்படுத்துமாறு கூறுபவர்களும் இருக்கின்றனர் என்று ஜீ. எல். பீரிஸ் குறிப்பிடுகின்றார். "பட்டு வேட்டிக் கனவோடு இருந்தவர்களுக்கு கட்டியிருந்த கோவணமும் பறிபோன கதை"போன்றே தமிழ் மக்களின் நிலைமை காணப்படுகின்றது.

13ஆவது திருத்தச் சட்ட விவகாரம் என்பது, முற்றிலும் இலங்கையின் உள்விவகாரம் -அதில் இந்தியாவோ அல்லது வேறு எந்தவொரு வெளித்தரப்போ தலையீடு செய்ய வேண்டியதில்லை என்பதே தற்போதைய ஆட்சியாளர்களின் உறுதியான நிலைப்பாடாக இருக்கின்றது. இந்த நிலைமைகளை விளங்கிக் கொண்டுதான் இந்திய வெளியுறவுச் செயலர், ஹர்ஷ் வர்தன், ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச் சட்டத்திலாவது தமிழ் கட்சிகள் ஒன்றாக நிற்க வேண்டுமென்னும் கருத்தை வலியுறுத்தியிருந்தார். இதற்கு மேல் தமிழர்கள் சிந்திக்கக்கூடாது - சமஷ்டிக் கோரிக்கையை கைவிட வேண்டுமென்று எந்தவொரு தரப்பும் கூறவில்லை. ஆனால், அதை நோக்கி தமிழர்கள் செல்வதற்கான வெளியுலக ஆதரவைப் பெற முடியாது. வெளியுலக ஆதவில்லாமல் தமிழர்களால் சமஷ்டித் தீர்வை எவ்வாறு அடைய முடியும்? கடந்த 74 வருடங்களாக ஈழத் தமிழர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியும் சமஷ்டித் தீர்வை சாதிக்க முடியவில்லையே! இந்த நிலைமையை துல்லியமாக புரிந்து கொண்டே ஈழத் தமிழ் தலைமைகள் என்போர் சிந்திக்க வேண்டும்.

கொழும்பு மிகவும் தந்திரமாக செயல்பட முற்படும்போது, அதற்கு சமதையான தந்திரங்களை கையாள்வதற்கான வாய்ப்புக்கள் தமிழர் தரப்புக்களுக்கு முழுமையாக இல்லாவிட்டாலும்கூட, ஆகக் குறைந்த தந்திரங்களையாவது ஈழத் தமிழர் தரப்புக்கள் கைக்கொள்ள வேண்டும். வீதிகளில் நின்று சுலோகங்களை உயர்த்துவது - ஆர்ப்பாட்டங்களை நடத்துவது - பிரகடனங்களை செய்வது - இவற்றின் மூலம் ஒரு போதுமே வெளித்தரப்புக்களை கையாள முடியாது.

வெளித்தரப்புக்களை கையாள வேண்டுமாயின், அவர்கள் வலியுறுத்தும் விடயங்களின் ஊடாகவே அவர்களை அணுக முடியும். இந்தியாவிடம் செல்லும்போது எவ்வாறு செல்ல வேண்டும் - அமெரிக்காவிடம் செல்லும்போது, எவ்வாறு செல்ல வேண்டும் என்னும் அரசியல் புரிதல் தமிழ் தரப்புக்களிடம் இருக்க வேண்டும். ஆனால், தமிழ் சூழலில் இடம்பெறும் குழாயடி சண்டைகளை உற்று நோக்கினால் அவ்வாறான அரசியல் புரிதல் பலரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. உணர்ச்சிகரமான பேச்சுக்களை விடுத்து, தமிழ் தலைமைகள் என்போர் சூழ்நிலைக்கேற்றவாறான தந்திரோபாயங்கள் தொடர்பில் மட்டுமே சிந்திக்க வேண்டும்.

# 13ஆவது திருத்தச்சட்ட அமுலாக்கத்தை ஜீ. எல். பீரிஸிடம் வலியுறுத்திய இந்தியா!

அலசுவது இராஜதந்திரி

*"அயல் நாடுகளுக்கே முன்னுரிமை" என்ற அடிப்படையில் இலங்கையின் உறுதிப்பாடு மற்றும் அதனூடாக இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை 13ஆவது திருத்தச்சட்டம் மூலமாக முழு அளவில் நிறைவேற்றுவது போன்றவற்றையே இந்தியா எதிர்பார்கின்றது என்பதை 'ஈழநாடு' பத்திரிகைக்கு கருத்து வெளியிட்டபோது வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் குறிப்பிட்டிருந்தார்.*

*பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தமது இந்திய விஜயம் தொடர்பான கருத்துகளை ஈழநாடுவுடன் பகிர்ந்து கொண்டார். தற்போதைய இந்தியாவின் அயலுறவுக்கொள்கையை பொறுத்தவரை இலங்கையுடனான உறவு இன்றியமையாததாக இருப்பதை இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் பெரிதும் உணர்ந்த நிலையிலேயே பேராசிரியர் ஜீ. எல். பீரிஸூடனான பேச்சுக்களில் இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தமது கருத்துகளை வெளியிட்டுள்ளார்.*

*இந்திய - இலங்கை வெளியுறவைப் பொறுத்தவரை இரு அம்சங்கள் முக்கியத்துவம்மிக்கவையாக இருக்கின்றன. முதலாவதாக அரசியல் ரீதியான உறவு. இரண்டாவதாக பொருளாதார ரீதியான உறவாகும்.*

*இலங்கை தற்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. அத்துடன், இலங்கையில் பொருளாதார உறுதிப்பாட்டுடன் நீடித்து நிலைத்த அரசியல் உறுதிப்பாடு பேணப்பட வேண்டுமானால் வடக்கு - கிழக்கு தமிழர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காணப்படவேண்டியது இன்றியமையாததாகின்றது.*

*இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெயசங்கருடனான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸின் பேச்சுக்களின்போது இந்தியா, இலங்கையில் சீனாவின் நடவடிக்கைகள் குறித்து எவ்வித தப்பபிப்பிராயங்களையும் கொண்டிராதிருப்பதை உறுதி செய்வதாகவே அமைந்திருந்தது.*

*இருந்தபோதிலும் இந்தியா இலங்கைக்கு பொருளாதார ரீதியான உதவிகளை வழங்குவதன் அடிப்படையில் அமெரிக்க டொலர்கள் 900 மில்லியனை நீண்டகால கடனாக வழங்க முன்வந்துள்ளது. அண்மைக்காலங்களில் இலங்கை பெற்றுக்கொண்ட பெருந்தொகை கடனுதவியாகவே இத்தொகை விளங்குகின்றது.*

*இந்தியாவின் இந்தப் பெருந்தொகையான கடனுதவி பிராந்திய ரீதியாக இலங்கையில் தனது செல்வாக்கை உறுதி செய்வதாகவும் இருக்கின்றது. இதுதவிர, திருகோணமலை எண்ணெய் குதங்கள் சம்பந்தமாகவும் இந்தியாவுடன் உடன்படிக்கைகளை இலங்கை செய்து கொண்டுள்ளது.*

*இவற்றுக்கு மத்தியிலேயே இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழர் பிரச்னை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இந்தியா பேராசிரியர் ஜீ. எல். பீரிஸிடம் வலியுறுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.*

*விரைவில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கின்றார். அச்சமயம் வடக்கு - கிழக்கு தமிழர் பிரச்சினை தீர்வுக்கு கூடுதல் அழுத்தம் இந்திய தரப்பிலிருந்து பிரயோகிகக்கப்படக் கூடிய வாய்ப்புகளும் அதிகமாகக் காணப்படுகின்றன.*

*வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கம் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சரிடம் கருத்து வெளியிட்டபோது, இவங்கையில் புதிய அரசியலமைப்பொன்றை கொண்டுவருவதற்கான முயற்சிகளில் தற்போது இலங்கையின் அரசியலமைப்பு நிபுணர்கள் ஈடுபட்டுள்ளதை தெரிவித்திருந்தார். எனவே, புதிய அரசியலமைப்பில் வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கான அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் விதத்தில் நகர்வுகள் மேற்கொள்ளப்படுமெனவும் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இந்திய வெளியுறவு அமைச்சரிடம் குறிப்பிட்டிருந்தார்.*

*அத்துடன், தேசிய அளவிலான இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே புதிய அரசியலமைப்பில் வடக்கு - கிழக்கின் தமிழர் பிரச்னைக்கு தீர்வு காணப்படும் எனவும் பேராசிரியர் இந்திய வெளியுறவு அமைச்சரிடம் தெரிவித்திருந்தார்.*


*இது இவ்வாறிருக்க வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தற்போது இந்தியாவை அணுகியமைக்கு இந்த மாத இறுதியில் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள 49ஆவது ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரும் முக்கியமானதாகவே இருக்கின்றது.*

*இலங்கைக்கு இத்தடவை ஜெனிவாவில் கனடா, அமெரிக்கா , பிரிட்டன் ஆகிய நாடுகளிடமிருந்து 46-1 ஜெனிவா தீர்மானத்தை இலங்கை நிறைவேற்றத் தவறியமை குறித்த அழுத்தங்கள் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவிடயத்தில் இந்தியாவின் இராஜதந்திர நகர்வுகள் மிக அவசியமானவையாக கருதப்படுகின்றன.*

*இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை விடயத்தில் தனது நலன்களுக்கே முக்கியத்துவமளித்துள்ளநிலை காணப்டுகின்றது. அத்துடன் இலங்கை இந்தியாவையே பெரிதும் தங்கியிருக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளதையும் இந்தியா நன்கறிந்தும் வைத்துள்ளது.*

*இந்நிலையில், இலங்கை வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தை எடுத்து நோக்கும்போது இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைப் பொறுத்தவரை 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கம் மற்றும் அதனடிப்படையிலான அதிகாரப்பரவலாக்கம் என்பவற்றில் இந்தியா உறுதியாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பெப்ரவரி - 14 திங்கட்கிழமை
பிலவ வருடம் - மாசி 02
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : திரையோதசி




**மேடம்**
உடல் நலம் சீராகும். மன அமைதி அதிகரிக்கும். தன்னம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். வெற்றி கிடைக்கும். உங்களின் மதிப்பு கூடும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**இடபம்**
பணியில் உள்ள நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். பிரபலங்கள் உங்களுக்கு உதவுவார்கள். நண்பர்களின் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**மிதுனம்**
பணியிடத்தில் நீங்கள் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். உங்களின் பலம் எது, பலவீனம் எது என்று உணர்வீர்கள். பணியை நன்கு உணர்ந்து கொண்டு செயல்படுவது நல்லது.

**கடகம்**
உங்களுக்கு வேண்டிய பணத்தை நல்லோர் மூலம் பெறுவீர்கள். இன்று சிலவற்றை சிரமப்பட்டு சமாளிக்க வேண்டியிருக்கும். பணியாளர்களுக்கு ஓரளவு வேலைச்சுமை குறையும்.

**சிம்மம்**
கம்பீரம் இழக்காமல் பணியிடத்தில் பொறுமையுடன் செயல்படுவீர்கள். குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். சிறப்பான நாள். உங்களால் பிறர் ஆதாயம் அடைவர். கோபத்தை குறையுங்கள்.

**கன்னி**
உங்கள் நிம்மதியை நிங்களே குறைத்துக் கொள்ள வேண்டாம். மனநிறைவு வரும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். மற்றவர்களின் பிரச்னைகளை தீர்த்து வைப்பீர்கள்.

**துலாம்**
உங்களை கண்டும் காணாமல் இருந்தவர்கள் வலிய வந்து பேசுவர். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை கூடும். சவாலான வேலைகளையும் எளிதாக செய்து முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். மனதில் மகிழ்ச்சி தங்கும். புது வீடு மாறுவீர்கள். பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்களது முயற்சிக்கு கைதட்டல் கிடைக்கும். செயலில் கவனம் தேவை.

**தனுசு**
சிலரது திருமணக் கனவுகள் நனவாகலாம். புதிய விஷயத்தை கற்பீர்கள். நட்பால் நன்மை கிட்டும். இன்று மறக்க முடியாத சம்பவம் நடைபெறும். ஆதாயம் தரும் வேலை ஒன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்**
விலகிச் சென்றவர்களை பற்றி கவலைப்பட வேண்டாம். தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். உங்களின் அந்தஸ்து உயரும். புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்**
இத்தனை நாளாக கவலை கொடுத்து வந்த விஷயம் மாறும். பழைய வாகனத்தைக் கொடுத்து புதிய வாகனம் வாங்குவீர்கள். விலகியவர்களைச் சமாதானம் செய்யும் எண்ணம் வரும்.

**மீனம்**
பல காலம் விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.சேமிப்பு சற்றே உயரும். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். திட்டமிட்ட பயணத்தில் மாற்றம் செய்வீர்கள். நன்மை நிகழும்.

# 3 பேருக்கு ஐ.எஸ் உடன் தொடர்பு? தஞ்சாவூரில் என்.ஐ.ஏ. சோதனை!

## முஸ்லிம்களின் போராட்டத்தால் பரபரப்பு



தஞ்சாவூர், பெப். 14

ஐ.எஸ் இயக்கத்தில் தொடர்புடையதாக கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில், தஞ்சாவூரில் 3 பேரின் வீடுகளில் தேசிய புலனாய்வுப் பிரிவு (என்ஐஏ) அதிகாரிகள் நேற்று முன்தினம் சோதனை நடத்தினர்.

கிலாபத் இயக்கத்தைச் சேர்ந்த மதுரை அப்துல்காதர் என்பவருக்கு ஐ.எஸ் இயக்கத்துடன் தொடர்பு இருப்பதாகவும், இந்துக்கள் குறித்து சமூக வலைதளங்களில் தவறான கருத்துகளைப் பரப்பியதாகவும் ஓராண்டுக்கு முன்புதேசிய புலனாய்வு அமைப்பினரால் (என்ஐஏ) கைது செய்யப்பட்டு, சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

இதேபோல, மன்னார்குடியைச் சேர்ந்த பாபா பக்ருதீன் என்பவரும் 4 மாதங்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டு, புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர்களிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையில், கிலாபத் இயக்கத்தில் உள்ள தஞ்சாவூர் கீழவாசல் தைக்கால் தெருவைச் சேர்ந்த அப்துல்காதர்(49), முகமது யாசின்(30), காவேரி நகரைச் சேர்ந்த அகமது(37) ஆகியோரின் வீடுகளில் என்ஐஏ அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர்.

இந்த சோதனை அதிகாலை 5.30 மணிக்கு தொடங்கி காலை 10 மணி வரை நடை பெற்றது.

வீடுகளில் சோதனை நடத்துவதை கண்டித்து அப்பகுதியைச் சேர்ந்த பெண்கள் உள்ளிட்ட முஸ்லிம்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அங்கு பரபரப்பான சூழல் நிலவியது. பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

# தி.மு.க. மீறலை தேர்தல் ஆணையம் கண்டுகொள்ளாமல் இருக்கிறது!

## ஆளுநரிடம் அ.தி.மு.க. நிர்வாகிகள் முறைப்பாடு

சென்னை, பெப் 14

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க. விதிமீறலில் ஈடுபடுவதை மாநில தேர்தல் ஆணையம் கண்டுகொள்ளவில்லை என்று தமிழக ஆளுநரிடம் அ.தி.மு.க. சார்பில் புகார் அளிக்கப்பட்டது.

சென்னை ஆளுநர் மாளிகையில் ஆளுநர் ஆர்.என்.ரவியை சந்தித்து அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார், சி.வி.சண்முகம் மற்றும் பெஞ்சமின் ஆகியோர் தி.மு.க. மற்றும் மாநில தேர்தல் ஆணையம் தொடர்பாக நேற்று புகார் மனு அளித்தனர்.

இதைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் ஜெயக்குமார் கூறியதாவது:

“மாநில தேர்தல் ஆணையம் தி.மு.க. அரசின் கைப்பாவையாக இருந்துகொண்டு, தி.மு.கவின் அராஜகங்கள், அத்துமீறல்களுக்கு துணைபோகிறது. பேரணி, ஊர்வலத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், 9ஆம் திகதி காலையில் திறந்த வேனில் ஊர்வலமாக உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம் செய்தார். அவர் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கவில்லை. அதுதொடர்பாக உரிய ஆதாரங்களுடன் ஆளுநரிடம் புகார் அளித்துள்ளோம்.”

# தனித்து போட்டியிடுவதால் தொண்டர்கள் உற்சாகம்

## பா.ஜ.க. செயற்குழு உறுப்பினர் குஷ்பு

சென்னை, பெப். 14

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதால் பா.ஜ.க. தொண்டர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர் என்று பா.ஜ.க. தேசிய செயற்குழு வின் சிறப்பு அழைப்பாளரும், நடிகையுமான குஷ்பு தெரிவித்துள்ளார்.

சென்னை சாலிகிராமத்தில் உள்ள காவிரி தெரு, தசரதபுரம், அருணாச்சலம் சாலை உள்ளிட்ட பகுதிகளில் பா.ஜ.க. வேட்பாளர் செந்தில்குமாரை ஆதரித்து நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட குஷ்பு, செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மக்களுக்கு சேவை செய்யவே பா.ஜ.க. உள்ளது. மற்ற கட்சியைப்போல குடும்பத்துக்கு சேவை செய்ய அல்ல. எங்களுக்கு வெற்றி,தோல்வி என்பது இரண்டாம்பட்சம்தான்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதால் பா.ஜ.க. தொண்டர் கள் மிகுந்த உற்சாகத்துடன் இருக்கின்றனர்.

நீட் தேர்வை பா.ஜ.க. கொண்டுவரவில்லை. ஏழை மாணவர்களுக்கு நீட் தேர்வால் பிரச்சினை இல்லை. மருத்துவக் கல்லூரி வைத்துள்ளவர்கள்தான் நீட் தேர்வால் பாதிப்படைந்துள்ளனர். ஹிஜாப் விவகாரத்தைப் பொறுத்த வரை, பள்ளிகளில் ஜாதி, மதங்களை கொண்டு செல்வது தவறு” என குஷ்பு கூறினார்.

# தி.மு.க. அளித்த 517 தேர்தல் வாக்குறுதிகளில் 7 வாக்குறுதிகளை கூட நிறைவேற்றவில்லை

## பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை குற்றச்சாட்டு

திருச்சி, பெப். 14

திமுக அளித்த 517 தேர்தல் வாக்குறுதிகளில் முழுமையாக 7 வாக்குறுதிகளைக் கூட நிறைவேற்றவில்லை என பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை குற்றஞ்சாட்டியுள்ளார்.

திருச்சி மாவட்டத்திலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் போட்டியிடும் பா.ஜ.க. வேட்பாளர்கள் அறிமுகக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை, வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி பேசியதாவது:

தூய்மையான உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்க, ஊழல் இல்லாத நிர்வாகத்தைக் கொடுக்க பா.ஜ.க. வேட்பாளர்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும். பிரதமர் மோடியை திட்டுவதுதான் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு முதல் வேலையாக உள்ளது. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் திமுக வேட்பாளர்களுக்கு ஆதரவாக முதல்வர் மு.க.ஸ்டாலின் எங்கும் நேரடி பிரச்சாரத்துக்கே வரவில்லை. மக்களின் கோபத்துக்கு ஆளாக வேண்டாம் என்பதால் நேராக வருவதற்குப் பதிலாக காணொலியில் பிரச்சாரம் செய்கிறார்.

தமிழகத்தில் இதுவரை 12 பா.ஜ.க வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளனர். திருச்சி மாவட்டத்தில் பா.ஜ.க. வேட்பாளர்கள் பலர் வெற்றி பெறுவர் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

இப்பிரச்சாரத்தில், மாவட்டத் தலைவர் வி.வி. செந்தில்நாதன், மாவட்ட பொதுச்செயலாளர் மோகன், முன்னாள் மாவட்டத் தலைவர் கே.சிவசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கைதாகிய இந்திய மீனவர்களுக்கு 25ஆம் திகதி வரை விளக்கமறியல்

கிளிநொச்சி, பெப். 14

கிளிநொச்சி, இரணைதீவு கடற்பரப்பில் எல்லை தாண்டிய நிலையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 12 இந்திய மீனவர்களையும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த 12 மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் கடற்படையினர் கையளித்த நிலையில் அவர்கள் நேற்று பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றபதில் நீதவான் எஸ். சிவபாலசுப்பிரணியம் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை இம்மாதம் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டார்.

குறித்த மீனவர்களின் விவரங்களை யாழ் இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் பெற்று அவர்களுக்கு தேவையான, உணவு, உடை என்பவற்றை வழங்கியிருந்தனர். (அ)

# சமுர்த்திக் கொடுப்பனவு இன்று முதல் அதிகரிப்பு!

## அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தகவல்



**கொழும்பு, பெப். 14**

**நாடு முழுவதும் உள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கான உதவித்தொகை இன்று முதல் 28 சதவீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளது.**

இந்தத் தகவலை பொருளாதார நுண் நிதி, சுயதொழில் மற்றும் வர்த்தக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதன்படி, இதுவரை 3 ஆயிரத்து 500 ரூபாய் உதவித்தொகை பெற்ற குடும்பம் ஒன்று, 4 ஆயிரத்து 500 ரூபாயும், 2 ஆயிரத்து 500 ரூபாய் உதவித்தொகை பெற்ற குடும்பம் ஒன்று, 3 ஆயிரத்து 200 ரூபாயும் ஆயிரத்து 500 ரூபாய் பெற்ற குடும்பம் ஒன்று ஆயிரத்து 900 ரூபாயும் உதவித் தொகையாகப் பெறவுள்ளன.

அனுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

சமுர்த்தி பயனாளிகளுக்கு மேலதிக கொடுப்பனவை நாடு முழுவதும் உள்ள 17 லட்சத்து 67 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்டத்தில் சமுர்த்தி பயனாளிகளின் கொடுப்பனவுக்காக 50 ஆயிரம் மில்லியன் ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளோம். இந்த அதிகரிப்பின் மூலம் அரசுக்கு மேலதிகமாக 15 ஆயிரம் மில்லியன் ரூபாயை செலவிட வேண்டியிருக்கும்.

இதன்படி, 2022ஆம் ஆண்டுக்குள் ஒட்டுமொத்த சமுர்த்தி பயனாளிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்காக 65 ஆயிரம் மில்லியன் ரூபாயை செலவிட அரசு எதிர்பார்க்கிறது.

இந்நாட்டின் உற்பத்திப் பொருளாதாரம் வலுவடைவதன் மூலம், மக்கள் நாட்டின் பொருளாதாரச் செயற்பாட்டிற்கும் தேசியப் பொருளாதாரத்திற்கும் அதிக பங்களிப்பை வழங்க முடியும் என நம்புகின்றோம்.

கோவிட் 19 தொற்றுநோயின் பேரழிவு விளைவுகள் மற்றும் எதிர்காலத்தில் அவர்களின் பொருளாதாரத்தை மேலும் மேம்படுத்த, அரசினால் முடியும் - என்றார்.

இதேவேளை, சமுர்த்தி உதவியைப் பெறுவதற்கு தகுதியற்ற பலர் இன்னும் சமுர்த்தித் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருவதாக அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி அதிகாரிகள் சங்கம் தெரிவித் துள்ளது. (அ)

# பல்வேறு விபத்துக்களில் ஐந்து பேர் உயிரிழந்தனர்!

கொழும்பு, பெப். 14

நாட்டின் பல பகுதிகளிலும் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற விபத்துகளில் இளைஞரொருவர் உள்ளிட்ட ஐவர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதியதில் முல்லைத்தீவை சேர்ந்த 22 வயது இளைஞர் உயிரிழந்தார்.

இதேபோன்று, வத்தேகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வத்தேகமை- எல்கடுவை வீதியில் லொறி வேக கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகி 30 அடி பள்ளத்தில் விழுந்து விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், லொறியின் சாரதி உயிரிழந்தார்.

மொரஹேன பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கொழும்பு-ஹோரனை பிரதான வீதியில் கொழும்பு நோக்கி பயணித்த கொண்டிருந்த முச்சக்கர வண்டியுடன் பின்னால் வந்த மோட்டார்சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றது. இதில், முச்சக்கர வண்டி சாரதி உயிரிழந்தார்.

களுத்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காலி - கொழும்பு பிரதான வீதியில் கொழும்பு நோக்கி பயணித்த மோட்டார்சைக்கிள் பாதசாரியொருவர் மீது மோதியதில் காயமடைந்த பாதசாரதி களுத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

ஏகோடஉயன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காலி-கொழும்பு பிரதான வீதி முகத்துவாரம் சுற்றுவட்டத்தில் முச்சக்கர வண்டியொன்று சைக்கியொன்றின் மீது மோதி விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த சைக்கிளில் சென்ற நபர் பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ)

# இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கு 10 வெளிநாட்டு மொழிகள் கற்பிக்க திட்டம்

கொழும்பு, பெப். 14

இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கு 10 வெளிநாட்டு மொழிகளை கற்பிப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஆங்கிலம், அரபு மற்றும் ஹிந்தி உள்ளிட்ட மொழிகளுடன், பிரான்ஸ், ஸ்பெய்ன், ஜேர்மன், இத்தாலி, சீன மற்றும் ஜப்பான் முதலான நாடுகளின் மொழிகளைக் கற்கும் வாய்ப்பு மாணவர்களுக்கு ஏற்படுவதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, இணையவழி முறைமையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் தேர்தல் ஆணைக்குழு பெப். 24 சந்திப்பு

கொழும்பு, பெப். 14

நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்களும் எதிர்வரும் 24ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள புதிய திருத்தப்பட்ட விதிகள் குறித்து அரசியல் கட்சிகளுக்கு தெரியப்படுத்தவும், வரவிருக்கும் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக மேலும் பல விடயங்கள் குறித்து விவாதிக்கவும் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இதன் மூலம் ஒவ்வொரு தரப்பினரின் முன்மொழிவுகள், புதிய கருத்துக்கள் குறித்தும் ஆணைக்குழுவின் கருத்துக்களை பெற முடியும் என நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார்.

மேலும், உரிய நேரத்தில் தேர்தலை நடத்துவது, அரசியல் கட்சிகளின் பொறுப்புகள் குறித்தும் விவாதிக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# எரிபொருள் விலை சூத்திரம் மீண்டும் அமுலுக்கு வரும்!

கொழும்பு, பெப். 14

எரிபொருள் விலை சூத்திரம் மீண்டும் அமுல்படுத்தப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பான சூத்திரம் ஏற்கனவே வரையப்பட்டு எதிர்வரும் 21ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த அரசாங்கம் கொண்டு வந்த எரிபொருள் விலை சூத்திரத்தை தற்போதைய அரசாங்கம் நீக்கி புதிய சூத்திரத்தை தயாரித்துள்ளது. (அ)

# ஆண்டுதோறும் 800 முதல் 1000 பேர் நீரில் மூழ்கி உயிரிழக்கும் பரிதாபம்!

கொழும்பு, பெப். 14

இலங்கையில் தினசரி சராசரியாக 3 பேர் என்ற அடிப்படையில் நீரில் மூழ்கி உயிரிழப்பதாக தரவுகள் கூறுகின்றன.

வருடாந்தம் சராசரியாக 800 முதல் 1000 பேர் நீரில் மூழ்கி இறக்கின்றனர்.

உலகிலேயே நீரில் மூழ்கி அதிகளவானவர்கள் பலியாகும் நாடுகளின் பட்டியில் இலங்கையும் முன்னணியில் உள்ளது.

பெரும்பாலும் வார இறுதி நாட்களிலேயே இவ்வாறான மரணங்கள் அதிகளவில் பதிவாவதாக பொலிஸாரின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, உலகளவில் வருடாந்தம் சராசரியாக 220,000 க்கும் அதிகமான மக்கள் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர். இவ்வாறான மரணங்களில் 90 வீதத்துக்கும் அதிகமானவை குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் நிகழ்கின்றன.

2019 ஆம் ஆண்டில், ஆசியா பசிபிக் பிராந்தியத்தில் 144,000 க்கும் அதிகமானோர் நீரில் மூழ்கி இறந்துள்ளனர். இது உலகளவில் பதிவான நீர் சம்பந்தமான இறப்புக்களின் 61 வீதமாகும் என்று உலக சுகாதார அமைப்பின் தரவுகள் கூறுகின்றன. (அ)

# வவுனியாவில் கடுமையான மழை; உழுந்து செய்கையாளர்கள் பாதிப்பு

வவுனியா, பெப். 14

வவுனியாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக உழுந்து செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இலங்கையில் அதிக உழுந்து உற்பத்தி மாவட்டங்களில் ஒன்றாகிய வவுனியா மாவட்டத்தில் உழுந்து அறுவடை தற்போது இடம்பெற்று வருகின்றது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையினால் பலர் உழுந்து அறுவடையை மேற்கொள்ள முடியாமல் உள்ளனர். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் விதைத்து 3 மாதமாக காத்திருந்து, அறுவடைக்கு தயாரான உழுந்து பயிர்கள் மழை காரணமாக பாதிப்படைந்து வருகின்றது. இதனால் பலரும் அறுவடையை மேற்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். (அ)

# தலைமன்னார் கடற்பரப்பில் 12 இந்திய மீனவர்கள் கைது

கொழும்பு, பெப். 14

**தலைமன்னார் கடற் பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 12 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், அவர்கள் பயணித்த படகுகள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.**

குறித்த தகவலை கடற்படைப் பேச்சாளர் கப்டன் இந்திக்க டி சில்வா வெளியிட்டுள்ளார்.

கைதானவர்கள் 12 பேரும் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் என்று இராமேஸ்வரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த படகுகளுடன் மேலும் 547 படகுகள் நேற்று இராமேஸ் வரத்திலிருந்து புறப்பட்டனர் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)





# கிளிநொச்சியில் யானைகளால் பயன்தரும் மரங்கள் அழிப்பு!

கிளிநொச்சி, பெப். 14

கிளிநொச்சி கண்ணகை புரத்தில் காட்டு யானைகள் புகுந்து பெருமளவான தென்னை மரங்களை அழித்துள்ளன.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்ணகை புரம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகள் வாழ்வாதார பயிர்களான தென்னை மற்றும் ஏனைய பயன்தரும் மரங்களை அழித்துள்ளன.

அக்கராயன், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் தொல்லை காணப்பட்டாலும் கண்ணகைபுரம் கிராமத்தில் காட்டு யானைகள் பாதிப்பு இல்லாத நிலை காணப்பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகள் இவ்வாறு பெருமளவான பயன் தரு மரங்களை அழித்துள்ளன.

இவ்வாறு காட்டு யானைகளின் தாக்கத்துக்கு உள்ளாகியமை தொடர்பில் கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் கிராம அலுவலர் சம்பவம் தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

குறிப்பாக அக்கராயன் ஸ்கந்தபுரம் முக்கொம்பன் பகுதிகளுக்கான யானை வேலிகளை அமைக்கின்ற போது இந்தப் பிரதேசங்களில் காட்டு யானைகளை கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் பிரதேச விவசாயிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஐ)

# உள்ளூராட்சி தேர்தலை அரசு நடத்தவேண்டும்!

## அரச பங்காளி கட்சியும் வலியுறுத்து

கொழும்பு, பெப். 14

அரசியல் ரீதியிலான தீர்மானத்தை முன்னெடுக்க நாட்டு மக்கள் தயாராகவுள்ளதால் தேர்தலை விரைவாக நடத்தவது அவசியமாகும்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தாமல் உள்ளூராட்சி மன்றங்களின் பதவி காலத்தை மேலும் ஒருவருட காலத்திற்கு நீடித்துள்ளமைக்கான காரணத்தை அரசாங்கம் இதுவரையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்று லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் மாறுப்பட்ட நிலைப்பாடு தோற்றம் பெற்றுள்ளது. அரசியல் ரீதியிலான தீர்மானத்தை முன்னெடுக்க நாட்டு மக்கள் தயாராகவே உள்ளார்கள்.

நெருக்கடியான சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு பொதுமக்கள் அரசியல் ரீதியிலான தீர்மானங்களை முன்னெடுப்பார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் ஒன்று நடத்தப்படுமாயின் அரசாங்கத்திற்கு மக்கள் ஆதரவு வழங்குவார்களா என்பது சந்தேகத்திற்குரியது.

கோவிட் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் பொது மக்கள் குறிப்பாக நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நடுத்தர மக்களின் நலன் குறித்து வரவு-செலவு திட்டத்தின் ஊடாக எவ்வித நலன்புரி திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை - என்றார்.

# வவுனியாவில் நேற்றும் எரிவாயு அடுப்பு வெடிப்பு

வவுனியா சிங்கள பிரதேச செயலக வீதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று அதிகாலை எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா சிங்கள பிரதேச செயலக வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு சமையல் செய்த பின்னர் சமையலறை கதவினை மூடிவிட்டு தூங்கச்சென்றுள்ளனர்.

இதன் பின்னர் நேற்று அதிகாலை தேநீர் தயாரிப்பதற்காக சமையல் அறையை திறந்த போது எரிவாயு அடுப்பு வெடித்திருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து குறித்த இடத்திற்கு சென்ற பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# கேதீஸ்வர வளைவு உடைக்கப்பட்ட இடத்தில் திடீர் கிறிஸ்தவ சொரூபம்!

## சைவ மகா சபை கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 14

திருக்கேதீச்சர ஆலயத்தின் வளைவு உடைக்கப்பட்ட வீதியின் முகப்பில் கிறிஸ்தவ சொரூபம் திடீரென அமைக்கப்பட்டமைக்கு அகில இலங்கை சைவ மகா சபை கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை சைவ மகா சபை வெளியிட்ட அறிக்கையில்,

வரலாற்று பெருமைமிகு பாடல் பெற்ற ஈச்சரமான திருக்கேதீச்சரத்தில் அதன் தனித்துவத்தை சிதைக்கும் வகையில் சைவர்களின் மனதை மீள மீள புண்படுத்தும் வகையில் திருக்கேதீச்சர வளைவு உடைக்கப்பட்ட வீதியின் முகப்பில் மிகப் பெரிய கிறிஸ்தவ சொரூபம் அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் திறக்கப்பட்டுள்ளது.

வழக்கு நீதிமன்ற நிலுவையில் உள்ள சமயம் இதனை உயர் மத பீடங்களின் ஆளுகையின் கீழ் இயங்கும் அண்மைய ஆண்டுகளில் பெருமெடுப்பில் பண்டைய ஒப்பந்த நடைமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்ட தேவாலய நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

மன்னார் உயர் அரச அதிகாரிகளுக்கு முன்கூட்டியே அறிவித்தும் சொரூபம் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுவது மிகுந்த அவதானத்துக்குரிய விடயமாகும்.

இது தொடர்பாக திருக்கேதீச்சர ஆலய நிர்வாகம் பொலிஸ் முறைப்பாடு ஒன்றை செய்துள்ள நிலையில் வரலாற்று கால தமிழ்ச் சைவர்களின் மரபுரிமையான திருக்கேதீச்சர திருக்கோவில் நிர்வாகத்திற்கு ஒட்டுமொத்த தமிழ் சைவர்களின் ஆதரவை வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

மத நல்லிணக்கத்தை பாதிக்கும் இச் செயலிற்கு உறுதுணை வழங்காது மன்னார் ஆயர் இல்லம் சொரூபத்தை திருக்கேதீச்சர நுழைவாயிலான அவ்விடத்திலிருந்து அகற்ற தேவாலய நிர்வாகத்தை பணிக்க வேண்டும்.

அரச உயர் அதிகாரிகள் இனியும் அசமந்த போக்குடன் நடந்து கொள்ளாது மத நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும், தொல்லியல் மரபுரிமைகளில் மாற்றம் செய்யும், தனித்துவத்தை சீர்குலைக்கும் செயல்பாடுகளை தடுத்து நிறுத்த வேண்டுவதுடன் சர்ச்சைக்குரிய சொரூபத்தை அகற்ற உடனடி நடவடிக்கை எடுக்குமாறு சைவத்தமிழர்கள் சார்பாக அகில இலங்கை சைவ மகா சபையினராகிய நாம் கேட்டு நிற்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 14

அல்லைப்பிட்டியில், 42 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 102 கிராம் கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் கஞ்சாவுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இராணுவ புலனாய்வு பிரிவினரும் ஊர்காவற்துறை பொலிஸாரும் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்த வுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# போதனாமருத்துவமனையில் எக்ஸ்ரேஇயந்திரம்உடைப்பு?

யாழ்ப்பாணம், பெப்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பொருத்தப்பட்டுள்ள 15 மில்லியன் ரூபாய் பெறுமதியான எக்ஸ்ரே கதிர் இயந்திரம் வேண்டுமென்றே குத்தி உடைக்கப்பட்டதா என கண்டறிய பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அதி நவீன எக்ஸ்ரே கதிர் இயந்திரம் மிக அண்மையில் பொருத்திய நிலையில் அதில் ஒரு முக்கிய பகுதி வேண்டுமென்றே குத்தி உடைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வைத்திய சாலை நிர்வாகத்தினால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் முன்பும் ஓர் தடவை இயந்திரத்தின் முக்கிய பகுதி ஒன்று களவாடப்பட்டபோதும் அது இறுதி வரை கண்டறியப்படவில்லை. இதேநேரம் தற்போது புதிய இயந்திரம் பொருத்தப்பட்டு 4 தினங்கள் மட்டுமே இயங்கிய நிலையில் ஒரு பகுதியில் உடைவு காணப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வைத்தியசாலை நிர்வாகம் செய்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் தடயவியல் நிபுணர்களின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

ஈழநாடு



## பயங்கரவாத சட்டத்தை நீக்க கொழும்பில் நாளை போராட்டம்!

கொழும்பு, பெப். 14

பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கு கோரும் கையெழுத்துப் போராட்டம் நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பு புறக்கோட்டையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும், யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில்,

“பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கான கையெழுத்துப் போராட்டம் எனது தலைமையில் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இது வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருந்ததோடு கிழக்கு மாகாணத்திற்கும் நகர்த்தப்பட்டிருந்தது. இந்நிலையில் கொழும்புப் புறக்கோட்டையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை முதல்இந்தக் கையெழுத்து பெறும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்கால நன்மை கருதி அனைத்து தரப்பினரும் பங்கேற்றுக்கொள்வது மிகவும் அவசியமானது - என்றார். (ஐ)

### அரச அடக்குமுறைகளுக்கு எதிராக

# சர்வதேசத்தை நாடுவதற்கு தொழிற்சங்கங்களும் முடிவு

கொழும்பு, பெப். 14

**வைத்தியசாலை சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டபோதிலும், சுகாதார பணியாளர்களின் போராட்டம் தொடர்கிறது. இதுபோன்று எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் , கோரிக்கைகளுக்கான தீர்வுகள் வழங்கப்படும் வரை தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனும் நிலைப்பாட்டில் தொழில் சங்கங்கள் உறுதியாகவுள்ளன.**

இந்த நிலையில், நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள் என்பவற்றின் ஊடாக தமது ஜனநாயக ரீதியான கோரிக்கைகளை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு, சர்வதேச தொழிலாளர் சங்க அமைப்பினை நாடவுள்ளதாகவும் தொழில் சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன.

தமது ஜனநாயக உரிமைகளுக்காக போராடும் 65 000 ஊழியர்களுக்கு தீர்வை வழங்குவதற்காக சுகாதார அமைச்சு எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

எம்மை அழைத்து கலந்துரையாடினால் 2 மணித்தியாலங்களில் இந்த நெருக்கடிக்கு தீர்வு காண முடியும். எவ்வாறிருப்பினும் எமது போராட்டத்தினால் இதுவரையில் எவ்வித உயிரிழப்புக்களோ அல்லது பாரதூரமான நிலைமையோ ஏற்படவில்லை என்றும் மருத்துவர் ரவி குமுதேஷ் சுட்டிக்காட்டினார்.

மேலும், சட்ட நடவடிக்கைகள், வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் தமது போராட்டத்தை முடக்க முடியாது என்றும், ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை முடக்குவதற்கு சதித்திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் சுகாதார நிபுணர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் ஊடாக சுகாதார அமைச்சு மற்றும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தவறான பாதையில் பயணிப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, போராட்டங்கள் தொடர்வதால் அசௌகரியத்தில் சுகாதார தொழிற்சங்கங்கள் தொடர்ந்தும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போதிலும், எவ்வாறேனும் தமக்கான சிகிச்சையை அல்லது மருந்துகளையேனும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் வைத்தியசாலைகளுக்கு வருகை தரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

## உள்ளூராட்சி, மாகாண தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் தயாரா?

### ஐக்கிய மக்கள் சக்தி சவால்

கொழும்பு, பெப். 14

அரசாங்கத்தால் மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யமுடியாத நிலை தற்போது உருவாகியிருக்கின்றது. எனவே, தாம் ஆட்சிபீடத்தில் இருப்பதை மக்கள் விரும்புகின்றார்களா? இல்லையா? என்ற கேள்வியை அவர்கள் மீண்டுமொருமுறை மக்களிடம் கேட்டுப்பார்க்கவேண்டும். இதன்படி தொடர்ச்சியாகப் பிற்போடப்பட்டுவரும் உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்திக் காட்டுமாறு அரசாங்கத்திற்கு சவால்விடுகின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின்பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கம்பளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

மேலும், அண்மைக்காலங்களில் நாட்டுமக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்ற போதிலும், அரசாங்கம் அவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

உள்ளூராட்சி, மாகாண சபை தேர்தல்கள் ஊடாக வேனும் மக்களின் நிலைப்பாடு என்னவென்பதையும் அவர்கள் தம்மிடமிருந்து விலகிச்செல்கின்றார்கள் என்பதையும் அரசாங்கத்தினால் புரிந்துகொள்ள முடியும்.

அடுத்ததாக கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடையக்கூடும் எனக்கூறி கடந்த காலங்களில் நாடளாவிய ரீதியில் பல்வேறு தரப்பினராலும் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களை முடக்கிய அரசாங்கம், அண்மையில் அநுராதபுரத்தில் பொதுகூட்டமொன்றை நடத்தியது. ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதி வழங்காத சுகாதாரத் தரப்பினர், ஆளுந்தரப்பின் பொதுக்கூட்டத்திற்கு மாத்திரம் எவ்வாறு அனுமதி வழங்கினார்கள்?

“ஒரே நாடு, ஒரே சட்டம்” என்ற கொள்கையின் அர்த்தம் இதுவா? எதுஎவ்வாறெனினும் ஒமைக்ரோன் வைரஸ் பரவலுக்கு அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் என்றார். (ஐ)

## பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கான நீதி கோரி சர்வதேசத்தை நாடுவது காட்டிக்கொடுப்பல்ல

### அருட்தந்தை சிறில் காமினி

கொழும்பு, பெப். 14

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேசத்தின் ஆதரவைப் பெறுவதானது, நாட்டை காட்டிக் கொடுக்கும் முயற்சி அல்ல. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்காகவே சர்வதேசத்தின் ஆதரவை பெறுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம்.

எமது இந்த போராட்டத்திற்கு கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகையும் தனது பூரண ஆதரவை வழங்குகவுள்ளதாக கொழும்பு மறை மாவட்ட அருட் தந்தை சிறில் காமினி அடிகளார் தெரிவித்தார்.

இலங்கை கத்தோலிக்க திருச்சபை எதிர்க்கட்சிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலின்படி செயல்படுவதாக கூறப்படுவதை முழுமையாக மறுக்கிறது.

கொழும்பு மறை மாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து பரிசுத்த பாப்பரசருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

இதற்கு பதில் கடிதம் அனுப்பியிருந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகை இவ்விடயம் தொடர்பில் தாம் முழுமையான ஆதரவை வழங்குவதாக அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாக அருட் தந்தை சிறில் காமினி குறிப்பிட்டார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று மூன்று ஆண்டுகள் ஆகப்போகின்றன. இருப்பினும் இதுவரை சூத்திரதாரி யார் என கண்டறியப்படவில்லை. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் குறித்து கத்தோலிக்க திருச்சபை அதிருப்தியில் உள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை கத்தோலிக்க திருச்சபை விரும்புகிறது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் மாபெரும் சூழ்ச்சி நடைபெற்றுள்ளதாக அப்போதைய சட்டமா அதிபர் தப்புள டி லிவேரா தெரிவித்திருந்தார். தப்புள டி லிவேரா வெளியிட்ட இந்த கருத்து தொடர்பில் குற்றவியல் விசாரணை திணைக்களம் அவரிடம் விசாரணை நடத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கு அரசாங்கம் நீதியை பெற்றுக்கொடுப்பதற்கு தவறினால், சர்வதேச நீதிமன்றத்தை நாடுவதற்கு இலங்கை கத்தோலிக்க திருச்சபை தயாராகவே உள்ளது.

இந்த விடயம் குறித்து சர்வதேச சமூகத்துக்கும் வெளிநாட்டில் வாழும் இலங்கை கத்தோலிக்கர்களுக்கும் விளக்கமளிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சர்வேதசத்தின் ஆதரவைப் பெறுவதென்பது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் முயற்சியாக கருதாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கருதவும்”, என்றார்.

## யாழ்ப்பாணம் வருகின்றனர் கொழும்பு மாநகர குழுவினர்

யாழ்ப்பாணம், பெப். 14

கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனாநாயக்கா உள்ளிட்ட குழுவினர் எதிர்வரும் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் வலி. தென் மேற்கு பிரதேச சபைகளிற்கு பயணிக்கவுள்ளதோடு இரு சபைகளுடன் தமது அனுபவங்களை பகிரும் வகையிலேயே இந்த பயணம் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 18 ஆம் மற்றும் 19 ஆம் திகதிகளில் இடம்பெறும் இந்தப் பயணத்தின்போது மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் சிநேகபூர்வ துடுப்பாட்டமும் இடம்பெறவுள்ளது.

இருநாள் பயணமாக கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் என 70 பேர் இந்த பயணத்தில் பங்குகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யானை தாக்கி ஒருவர் மரணம்

பொலநறுவை, பெப். 14

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி நேற்று ஒருவர் உயிரிழந்தார்.

பொலநறுவை - அரங்க விலை - எல்லேவவையை சேர்ந்த 60 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

யானையின் தாக்குதலுக்கு இலக்கானவர் வைத்தியசாலையில் சேரக்கப்பட்டபோதிலும் சிகிச்சை பலனின்றி மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)





# நேரு பேரனின் சாதனையால் இந்தியாவுக்கு வந்த சோதனை!

**போர்க்குற்றத்துக்கு பொறுப்புக்கூறல், சர்வதேச நீதிவிசாரணைப் பொறிமுறை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி என்பவைகளை அடியோடு மறுக்கும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஏற்கனவே இடம்பெற்ற பிரச்சனைகளையிட்டு நேரத்தை வீணாக்க வேண்டியதில்லை என்று யாழ்ப்பாணத்தில் நின்றவாறு தமிழருக்கு வழங்கிய ஆலோசனை ஜெனிவாவுக்கும் இந்தியாவுக்குமானதும்கூட.**

**பனங்காட்டான்**

தமிழர் பேச்சுவழக்கில், முக்கியமாக - ஈழத்தமிழரின் சொல்லாடலில் தடல்புடல் என்றொரு வார்த்தையுண்டு. சிறப்பான, விசேடமான, முக்கியமான நிகழ்வுக் காலங்களில் தடல்புடலாக என்று குறிப்பிடுவது வழக்கம்.

அதீத அக்கறையுடன், தீவிரமான செயற்பாட்டுடன், மிதமிஞ்சிய வேகத்துடன் இடம்பெறும் சம்பவங்களையே தடல்புடலாக என்று கூறுவர்.

இலங்கையின் அரசியலைப் பொறுத்தளவில் இப்போது தடல்புடலாக பல விடயங்கள் இடம்பெறுகின்றன. வருடத்துக்கு மூன்று முறை வந்து போகும் ஜெனிவாக் காலம் இது. தேசியத் தலைவர் வே.பிரபாகரன் பாசையில் சொல்வதானால், அடி வேண்டி வேண்டிக் களைத்துப்போன தமிழர் தரப்பும், அடித்து அடித்துக் களைத்துள்ள சிங்களத் தரப்பும் ஜெனிவாவை மையப்படுத்தி போராடிக் கொண்டிருக்கின்றன.

ஜெனிவாவை நோக்கி தமிழர் தரப்பிலிருந்து கடிதங்கள் பறக்கின்றன. இதனை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆரம்பித்து வைத்துள்ளார். முன்னரைப்போல அவரது கூட்டுக்குள்ளிருந்தே தனித்தனிக் கடிதங்கள் நிச்சயம் தொடரும்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடர் இந்த மாதத்தின் இறுதி நாளான 28ஆம் திகதி ஆரம்பமாகி, ஏப்ரல் முதலாம் திகதிவரை இடம்பெறும். இம்முறை இலங்கை தொடர்பான எழுத்து வடிவிலான அறிக்கையை மனித உரிமை ஆணையாளர் மிச்சேல் பச்சிலற் அம்மையார் சமர்ப்பிப்பார்.

46:1 இலக்கத் தீர்மான அடிப்படையில் இது தொடர்பான மூன்று அமர்வுகளும் முக்கியமானவையாக இரு தரப்பாலும் பார்க்கப்படுகிறது. 46:1 தீர்மானத்தை இலங்கை அரசு எவ்வாறு கையாளுகிறது, அதனை எவ்வாறு மதிக்கிறது, நிறைவேற்றுவதில் எவ்வளவு தூரம் நகர்ந்துள்ளது என்பதை 48ஐத் தொடர்ந்து வரும் அமர்வுகளில் கட்டம் கட்டமாக மனித உரிமை ஆணையாளர் தெரிவிக்க வேண்டும்.

இதன் அடிப்படையில், 48ஆவது அமர்வில் வாய்மூல அறிக்கையை வெளியிட்டார். இந்த மாதம் ஆரம்பமாகும் அமர்வில் எழுத்துமூல அறிக்கையை சமர்ப்பிப்பார். அடுத்த கட்டமாக தீர்மானம் மீதான முழுமையான கலந்துரையாடலும் விவாதமும் இடம்பெறும். அதன் பின்னரே, 46:1 தீர்மானத்தின் எதிர்காலம் என்னவென்பது தெரியவரும்.

இலங்கை அரசைப் பொறுத்தளவில் எல்லாமே ஒன்றுதான். அவ்வப்போது சாதுரியமான செயற்பாடுகள் மூலம் சர்வதேசத்தை ஏமாற்றுவதே இதன் வழமை. அமெரிக்கா முன்மொழிந்த தீர்மானத்துக்கு இணைஅனுசரணை வழங்கிவிட்டு, பின்னர் அதிலிருந்து வெளியேறியபோதே அதன் சுயரூபம் கல்வெட்டாகத் தெரியவந்தது. இன்றும் அதே நிலைதான் தொடர்கிறது.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலக வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சென்று தமிழ் அரசியல் தரப்புகளை சந்தித்தார். இதற்கு முன்னர் ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர்கள் இலங்கை சென்று பெற்றுக் கொண்ட தரவுகளின் தொடர்ச்சியாக இதனைப் பார்க்கலாம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், கஜேந்திரகுமாரின் மக்கள் முன்னணி, யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் ஆகியோருடன் இவர் நடத்திய சந்திப்பு ஊடகங்களில் வெளியானது. கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சி.வீ.கே. சிவஞானம் ஆகியோர் சந்தித்தனர். கூட்டமைப்பின் பங்காளிகளில் ஒருவரான ரெலோவையும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனையும் கச்சிதமாக இவர்கள் தவிர்த்துக் கொண்டனர்.

ஹனா சிங்கர் தாம் சந்தித்த அனைவரது கருத்துகளையும் உள்வாங்கிய பின்னர் ஐந்து ஆங்கிலச் சொற்களில் ஒரு விடயத்தை அவர்களுக்குத் தெரிவித்தார். ஜெனிவா அமர்வில் Some concrete action may follow (சில தீர்க்கமான நடவடிக்கைகள் வரக்கூடும்) என்பதே அவர் தெரிவித்தது. ராஜரீகப் பணியிலுள்ள ஒருவரால் அவ்வளவுதான் குறிப்பிட முடியும். அர்த்தம் புரிந்து கொள்ளக் கூடியது.

இந்த விடயம் பகிரங்கமானதையடுத்து இலங்கை அரசு உசாரடைந்தது. 49ஆவது அமர்வு தங்களுக்கு நெருக்கடியைக் கூட்டுமென்பது முற்கூட்டியே தெரிந்திருந்தாலும், சம்பந்தப்பட்ட இராஜதந்திரி ஒருவர் ராஜரீக மொழியில் தெரிவித்த கருத்து, ஜெனிவாவை உச்ச அளவில் தாங்கள் இம்முறை எதிர்கொள்ள வேண்டுமென்ற அச்ச உணர்வை கோதபாய குழுமத்துக்கு ஏற்படுத்தியது.

மறுதரப்பில், தாம் மறைமுகமாகத் தெரிவித்த கருத்தை தமிழர் தரப்பிலுள்ள ஒரு சிலர் அவசரப்பட்டு ஊடகங்களுக்குத் தெரிவித்ததையிட்டு ஹனா சிங்கர் மனம் கசந்ததையும் ஊடகங்கள் சுட்டியுள்ளன.

ஒருபுறத்தில் நாடளாவிய ரீதியில் தங்கள் அரசியல் செல்வாக்கு குறைந்து வருவதையும், வாக்கு வங்கி வற்றிச் செல்வதையும் அவதானித்துள்ள ராஜபக்சக்களுக்கு அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டி நேர்ந்துள்ள நெருக்கடிக்குள், ஜெனிவா சவாலை முகங்கொடுக்கும் அவசியமும் சேர்ந்து இரட்டிப்புப் பளுவாக்கியது. அதனால் ஜெனிவாவை கையாளும் பணி வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நீதியமைச்சர் அலி சப்றி ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் ஓர் அங்கமாக இரு அமைச்சர்களும் அண்மையில் வடக்கே சென்றனர்.

எதிர்பார்த்ததுபோல இலகுவானதாக இவர்களின் பயணம் அமையவில்லை. சென்ற இடமெங்கும் கேள்விக் கணைகள். அரசின் மீதான தங்கள் நம்பிக்கையீனத்தை ஒவ்வொருவரும் வெளிப்படையாகத் தெரிவித்தனர். ஜெனிவாவுக்கு வெள்ளையடிக்கவே வந்ததாகவும் தெரிவிக்கத் தவறவில்லை. புதிய அரசியலமைப்பு, மாகாண சபை முறைமை நீக்கம் போன்றவைகளை நேரடியாகவே வினவினர்.

சமகாலத்தில் அரசின் பங்காளிகளில் ஒருவரான சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஓர் உண்மையை கொழும்பில் போட்டுடைத்தார். வரப்போவதாகக் கூறப்படும் புதிய அரசியலமைப்பின் மூலம் இனப் பிரச்சனைக்குத் தீர்வு கிடையாது என்பதுவே இவர் வெளியிட்ட துணிச்சலான அறிவிப்பு. முன்னைய மகிந்த ஆட்சிக் காலத்தில் செயற்பட்ட சர்வ கட்சிகளின் கூட்ட தவிசாளராகக் கடமையாற்றிய திஸ்ஸ விதாரண, அனைத்துத் தரப்பும் ஏற்றுக் கொண்ட ஆலோசனைகளை அறிக்கையாக சமர்ப்பித்ததும், அது அப்படியே குளிர்சாதனப் பெட்டிக்குள் புதைக்கப்பட்டதும் தெரிந்த வரலாறு.

திஸ்ஸ விதாரணவின் அறிவிப்பு இரண்டு அமைச்சர்களையும் நெருக்குவாரத்துக்குள் தள்ளியது. முக்கியமாக நிகழ்கால பேசுபொருளாகவுள்ள மாகாண சபை பற்றி ஊடகங்கள் கேள்வி எழுப்பின.

புதிய அரசியலமைப்பில் மாகாண சபைகள் நீக்கப்படுமென தாம் நினைக்கவில்லையென்றும், அது பற்றி எதனையும் ஜனாதிபதி தமக்குத் தெரிவிக்கவில்லையென்றும் நழுவல் பாணியில் அமைச்சர் பீரிஸ் பதிலளித்தார். ஆனால், அமைச்சர் அலி சப்றியின் பதில் வேறு விதமாக அமைந்தது. அதாவது, மாகாண சபை முறைமையில் சில மாற்றங்கள் வருமென்று மறைத்து வைக்கப்பட்டிருந்த உண்மையை கக்கி விட்டார்.

அரசுக்கு நெருக்கமான ஊடக வட்டாரங்களின் தகவலின்படி புதிய அரசியலமைப்பு வருமானால் அதில் ஒரு வரி - ஒரேயொரு வரி முக்கியமானதாக இருக்கும். காணி அதிகாரமும், காவற்துறை அதிகாரமும் மத்திய அரசின் கீழ் அமையும் என்ற ஒற்றை வரி மாகாண சபைக்கு எந்த அதிகாரமும் இருக்காது என்பதை நிலைநிறுத்தும். இவ்விடயத்தில் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை இந்தியா வெளியிலிருந்து பார்க்க முடியுமேயன்றி அதில் தலையிட முடியாது. 1987இல் ராஜிவ் காந்தியும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனமும் செய்து கொண்ட ஒப்பந்தமும், பதின்மூன்றாவது திருத்தமும்கூட இந்திய தலையீட்டுக்கு இடம்கொடுக்காது.

1948க்குப் பின்னரான முதலாவது அரசியலமைப்பு, 1972இல் சிறிமாவோ பண்டாரநாயக்கா அமுலாக்கிய இரண்டாவது அரசியலமைப்பு, 1978இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன பிரகடனப்படுத்திய மூன்றாவது அரசியலமைப்பு ஆகியவைகளை விஞ்சியதாக, எண்ணுக்கணக்கில் சிறுபான்மையினராகக் கொள்ளப்படும் தமிழரின் அற்ப சொற்ப உரிமைகளையும் கோதாவின் உத்தேச அரசியலமைப்பு இல்லாமற் செய்யப் போகிறது.

போர்க்குற்றத்துக்கு பொறுப்புக் கூறல், சர்வதேச நீதிவிசாரணைப் பொறிமுறை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி என்பவைகளை அடியோடு மறுக்கும் சிங்கள அரசின் பிரதிநிதி ஜி.எல்.பீரிஸ், ஏற்கனவே இடம்பெற்ற பிரச்னைகளையிட்டு நேரத்தை வீணாக்க வேண்டியதில்லை என்று யாழ்ப்பாணத்தில் நின்றவாறு தமிழருக்கு வழங்கிய ஆலோசனை வெறுமனே தமிழருக்கு வழங்கப்பட்டதல்ல. இது ஜெனிவாவுக்கானது. இதுதான் இவர்கள் இந்தியாவுக்கும் கூறுவது.

சில நாட்களுக்கு முன்னர் இந்தியா சென்றிருந்த பீரிஸ் அங்கு தமது சகபாடியான ஜெய்சங்கரையும், வெளியுறவுச் செயலரையும் சந்தித்தார். பஸில் ராஜபக்ச கடந்த மாதம் புதுடில்லி சென்றபோது அவரைச் சந்திக்காத பிரதமர் மோடி இவரையும் சந்திக்கவில்லை. ஆனால், மோடி அடுத்த மாதம் கொழும்புக்கு விஜயம் செய்யவிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்திய விஜயத்தின் பின்னர் ஜி.எல். பீரிஸ் பகிரங்கமாகத் தெரிவித்துவரும் இரு விடயங்கள் - இலங்கை தமிழர் பிரச்சனை பற்றி இந்தியாவில் எவரும் என்னுடன் பேசவில்லை, இலங்கை அரசியல் பரவலாக்கலில் இந்தியாவுக்கு வகிபாகம் இல்லை - என்பவை.

ஆனால், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் அமைச்சு வெளியிட்ட செய்தி அறிக்கையில் - தமிழருக்கான நீதியை உறுதி செய்வது இலங்கையின் நலனுக்கு நல்லது, இதற்கு அதிகாரப் பரவலாக்கல் முக்கியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழரையும் ஜெனிவாவையும் சர்வதேசத்தையும் கையாளத் தெரிந்த இந்தியா, எவ்வாறு பீரிஸ் போன்றவர்களைக் கொண்ட இலங்கையைக் கையாளப் போகிறது? நேருவின் பேரனின் சாதனையால் இந்தியாவுக்கு வந்துள்ளது சோதனை!

# அமெரிக்காவின் இந்தோ– பசிபிக் அறிக்கை; இந்தியா, சீனா குறித்து என்ன சொல்கிறது?

இந்தோ-பசிபிக் பிராந்தியம் தொடர்பான தனது கொள்கை குறித்த அறிக்கையை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. இந்தியா தற்போது முக்கியமான புவிசார் அரசியல் சவால்களால் சூழப்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சீனா மற்றும் மெய்யான எல்லை கட்டுப்பாட்டுக் கோடு (சீனாவுடனான எல்லைக் கோடு) தொடர்பான அதன் நிலைப்பாடு காரணமாக இந்த சவால் ஏற்பட்டுள்ளது என்கிறது அந்த அறிக்கை.

வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட இந்த அறிக்கை, ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்தின் பிராந்தியம் குறித்த முதல் அறிக்கையாகும்.

இந்த அறிக்கையில், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே அதிகரித்து வரும் ஒத்துழைப்பு வலியுறுத்தப்பட்டுள்ள அதே வேளையில், சீனா மீது கடுமையாக குறிவைக்கப்பட்டுள்ளது.

இந்தோ- பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் நிலையை வலுப்படுத்துவது பற்றியும், இந்தியாவின் வலுவான ஆதரவுடன் பிராந்திய தலைமை வகிப்பது பற்றியும் இந்த அறிக்கை பேசுகிறது.

இந்த அறிக்கையை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் ருவீட் செய்துள்ளார்.

“எங்கள் இந்தோ-பசிபிக் உத்தியானது, ஒரு சுதந்திரமான, கட்டுப்பாடுகள் அற்ற, இணைக்கப்பட்ட, வளமான, பாதுகாப்பான மற்றும் மீள்திறன் கொண்ட ஒரு பிராந்தியத்திற்கான நெடுநோக்குபார்வையை கொண்டுள்ளது. இந்தோ-பசிஃபிக் பகுதியில் உள்ள ஒரு நாடு என்ற நிலையில் அந்த தொலைநோக்கு பார்வையை நனவாக்க எங்கள் கூட்டாளிகளுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.”

“தெற்காசியாவில் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்காக அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து செயல்படுவோம் மற்றும் பிராந்திய குழுக்கள் மூலம் செயல்படும் செயல்தந்திர ஒத்துழைப்பை நாங்கள் தொடர்ந்து உருவாக்குவோம்,” என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

“அதே நேரத்தில் சுகாதாரம், விண்வெளி மற்றும் சைபர்ஸ்பேஸ் போன்ற புதிய பகுதிகளில் நாங்கள் ஒத்துழைக்கிறோம். எங்கள் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை ஆழமாக்குகிறோம் மற்றும் சுதந்திரமான, கட்டுப்பாடுகளற்ற இந்தோ-பசிஃபிக் பிராந்தியத்தை பராமரிக்க பணியாற்றுகிறோம்.”



**இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் பொருளாதாரம், செயல்தந்திரம், இராணுவம் மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றின் பலம் காரணமாக சீனா செல்வாக்கு செலுத்துகிறது என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. உலகில் மிகவும் செல்வாக்கு மிக்க சக்தியாக இருக்க சீனா விரும்புகிறது.**

அமெரிக்கா தனது அறிக்கையில் இந்தியாவை ஒத்த எண்ணம் கொண்ட கூட்டாளி என்றும் கூறியுள்ளது.

இந்தோ-பசிஃபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் பங்கு “தெற்காசியாவிலும், இந்தியப் பெருங்கடலிலும் ஒரே எண்ணம் கொண்ட கூட்டாளியாக இந்தியா இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். இந்தியா தென்கிழக்காசியாவுடன் தீவிரமாக தொடர்புகொண்டுள்ளது. அது குவாட் மற்றும் பிற பிராந்திய மன்றங்களுக்கு ஒரு உந்து சக்தி மற்றும் பிராந்திய வளர்ச்சிக்கான இஞ்சின் போன்றது,” என்று இதுகுறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

இந்தியா குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கிறது என்று பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு மூத்த அமெரிக்க அதிகாரி பிடிஐ செய்தி முகாமையிடம் கூறினார்.

“இந்தியா முக்கியமான சவால்களை எதிர்கொண்டுள்ளது. மெய்யான எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டில் சீனாவின் நடத்தை இந்தியாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எங்கள் கண்ணோட்டத்தில், மற்ற ஜனநாயக நாடுகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கான பல வாய்ப்புகளை நாங்கள் காண்கிறோம். மக்களின் கருத்துக்களை புரிந்துகொள்ளும் ஒரு நாட்டுடன் நாங்கள் பணியாற்றுகிறோம். இதன்மூலம் பிராந்தியத்தில் உள்ள அவசரப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் பணியாற்றமுடியும்,” என்று அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

**டிரம்ப் நிர்வாகத்திற்கும் பாராட்டு**

அறிக்கையை வெளியிட்ட அந்த அதிகாரி, டிரம்ப் அரசு உட்பட முன்னாள் அமெரிக்க அரசுகள் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் சிறப்பாகப் பணியாற்றியதாகக் கூறினார்.

குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்று வரும் வேளையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. குவாட் நாடுகளில் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை அடங்கும். பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவது குறித்து இந்த நாடுகள் வெள்ளிக்கிழமை கவலை தெரிவித்தன.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் பொருளாதாரம், செயல்தந்திரம், இராணுவம் மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றின் பலம் காரணமாக சீனா செல்வாக்கு செலுத்துகிறது என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. உலகில் மிகவும் செல்வாக்கு மிக்க சக்தியாக இருக்க சீனா விரும்புகிறது.

**சீனா மீதான தாக்குதல்**

சீனாவின் ஆக்கிரமிப்பு உலகம் முழுவதும் பரவியுள்ளதாகவும், ஆனால் இந்தோ-பசிஃபிக் பகுதியில்தான் இது மிக அதிகமாக இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா மீதான பொருளாதார அழுத்தம் முதல் இந்தியாவுடனான உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டில் மோதல் வரை, தைவான் மீதான அழுத்தம் மற்றும் கிழக்கு-தெற்கு சீனக் கடலில் உள்ள அண்டை நாடுகளை மிரட்டி அச்சுறுத்துவது வரை, சீனாவின் நடத்தையின் சுமைகளை எங்கள் நட்பு நாடுகளும், கூட்டாளிகளும் சந்திக்கவேண்டி உள்ளது.

சீனா, மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டங்களை மீறுகிறது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடல் வழிப்போக்குவரத்து சுதந்திரம் மற்றும் இந்தோ-பசிஃபிக் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மை, செழுமை ஆகியவற்றைக் கொண்டுவரும் பிற கொள்கைகள் இதில் அடங்கும்.

“இந்தோ-பசிஃபிக் பிராந்தியத்திற்கும் உலகிற்கும் நன்மை பயக்கக்கூடிய வகையில், கொள்கைகள் மற்றும் விதிமுறைகளை சீனா மாற்றுமா என்பதை அடுத்த பத்தாண்டுகளில் எங்கள் கூட்டு முயற்சிகள் தீர்மானிக்கும்,”என்று அறிக்கை மேலும் கூறுகிறது.

“அமெரிக்கா தனது முயற்சிகள் மூலம் நமது வலிமைக்கான அடித்தளத்தில் முதலீடு செய்கிறது. தன் கூட்டாளிகள் மற்றும் நட்பு நாடுகளுடன் தன் பார்வையை பொருத்த முயற்சிக்கிறது. மேலும் நமது பகிரப்பட்ட நலன்கள், எதிர்காலத்திற்கான பார்வை ஆகியவற்றைப் பாதுகாக்க சீனாவுடன் போட்டியிடுகிறது.”

“நாங்கள் சர்வதேச ஒழுங்கை வலுப்படுத்துவோம். பகிரப்பட்ட நன்மதிப்புகளின் அடிப்படையில் இதை செய்வோம். மேலும் 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை சந்திக்க அதை சீர்திருத்துவோம்” என்றும் அறிக்கை கூறுகிறது.

“எங்கள் நோக்கம் சீனாவை மாற்றுவது அல்ல. ஆனால் அது செயல்படும் செயல்தந்திர சூழலை வடிவமைப்பதாகும். கூடவே அமெரிக்காகவுக்கும், அதன் நட்பு நாடுகள் மற்றும் கூட்டாளிகளுக்கு சாதகமாக இருக்கும் விதமாக, உலகில் செல்வாக்கு சமநிலையை ஏற்படுத்த வேண்டும்.”

75 ஆண்டுகளாக, பிராந்திய அமைதி, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பு ஆகியவற்றை ஆதரிக்க அமெரிக்கா வலுவான மற்றும் நீடித்த பாதுகாப்பு இருப்பை பராமரித்து வருகிறது என்று அறிக்கை கூறுகிறது. அந்தப் பாத்திரத்தை விரிவுபடுத்தி நவீனப்படுத்துகிறோம். தனது நலன்களைப் பாதுகாப்பதற்கும், அமெரிக்கப் பகுதி மற்றும் அதன் நட்பு நாடுகள் மற்றும் பங்காளிகளுக்கு எதிரான ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கும் தனது திறன்களை அதிகரித்து வருகிறது.

**ஒருங்கிணைந்த எதிர்ப்பை வலுவாக்குதல்**

பிராந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான ஒற்றுமையை அதிகரிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஒற்றுமையானது கூட்டாளிகள் நாடுகளுடன் ஆழமான ஒத்துழைப்பை உள்ளடக்கியது.

கூடவே தாய்வான் ஜலசந்தியில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை பேணுதல். கொரிய மற்றும் ஜப்பானிய நட்பு நாடுகளுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், கொரிய தீபகற்பத்தின் முழுமையான அணுவாயுதமயமாக்கல் தடுப்பை முன்னெடுத்துச்செல்வது ஆகியவை இதில் அடங்கும்.

இந்தியாவுடனான உறவை மேம்படுத்து வதில் கடந்த நான்கு அமெரிக்க அரசுகள் முக்கிய பங்கு வகித்ததாக செய்தியாளர்களின் ஒரு கேள்விக்கு பதிலளித்த மூத்த அதிகாரி, கூறினார்.

“குவாடில் இந்தியாவின் பங்கு முக்கியமானது. பிராந்தியப் பிரச்னைகளில் வெளிப்படையாகப் பேசும் திறன், அத்தியாவசியப்பொருட்களை வழங்குவதற்கு ஒன்றிணைந்து செயல்படுதல் மற்றும் ஒத்துழைப்பின் வழிகளை மேம்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்” என்று அந்த அதிகாரி கூறினார்.

ஆஸ்திரேலியா மற்றும் பிற நாடுகளை ஒப்பிடும்போது பல வழிகளில் இந்தியா மிகவும் தனித்தன்மையான இடத்தில் உள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

**- பி.பி.சி.**



# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

❖ **வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.**

13.

| | 3 | |
|---|---|---|
| 2 | 17 | 4 |
| | 3 | |

| | 5 | |
|---|---|---|
| 3 | 22 | 4 |
| | 2 | |

| | 2 | |
|---|---|---|
| 4 | ...... | 5 |
| | 3 | |

1) 26 2) 23 3) 12

**14)** **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.**

i) தும்ரிய ஸ்தானய : ..........................................................................................

ii) தே பொன்ன : .......................................................................................... (2 x 1 =2 புள்ளிகள்)

❖ **பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்கள உச்சரிப்பைத் தமிழில் எழுதுக.**

அதிபர் : ......................................................

பதினைந்து : .............................................

(2 x 1 =2 புள்ளிகள்)

**15)**

| | | |
|---|---|---|
| 5 | | 1 |
| | 7 | |
| 0 | | 8 |

i) அடைப்பினுள் தரப்பட்ட இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகப்பெரிய எண்ணைச் சொற்களில் எழுதுக.

..........................................................................................................................

ii) அடைப்பினுள் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகச்சிறிய எண்ணை விரித்து எழுதுக.

..........................................................................................................................

**16)** பின்வரும் எண்களை ஏறுவரிசையில் எழுதும் போது நடுவில் வரும் எண்ணின் இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?

6357, 4349, 8937...............................................................................

**17)** குமரன் கடைக்குச் சென்று 20 முட்டைகளை வாங்கினான். வரும் வழியில் $\frac{2}{5}$ பங்கு முட்டைகள் உடைந்தன எனின்,


i) உடையாத முட்டைகள் எத்தனை? ...............................

ii) உடைந்த முட்டைகள் எத்தனை? ...............................

**18)** i தொடக்கம் xx வரையான உரோம எண்களை எழுதும்போது நான்கு குச்சிகளைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய உரோம எண்களை எழுதுக.

..........................................................................................................

**19)**



i) நிழற்றப்பட்ட பகுதியை தசமத்தில் எழுதுக.

..........................................................................................

ii) உருவில் அரைவாசிப்பகுதியை நிழற்ற இன்னும் எத்தனை கட்டங்கள் நிழற்றப்பட வேண்டும்.

..........................................................................................

**20)** ஒரு நோயாளிக்கு தினமும் மூன்று வேளை இரண்டு மாத்திரைகள் வீதம் வழங்கப்படுகின்றன. எனின் வாரம் ஒன்றிற்குத் தேவையான மாத்திரைகள் எத்தனை?

..........................................................................................

**21)** பின்வரும் உருவத்திற்கு வரையக் கூடிய சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக.



**22)** பின்வரும் விலைப்பட்டியலைப் பூரணப்படுத்துக.

| பொருள் | பொருளின் விலை | செலுத்திய பணம் | மீதிப் பணம் |
|---|---|---|---|
| பென்சில் | ரூ. 10.50 | ரூ. 20.00 | ரூ. .................... |
| உணவுப் பெட்டி | ரூ. 28.00 | ரூ. 50.00 | ரூ. .................... |
| போத்தல் | ரூ. 257.00 | ரூ. 300.00 | ரூ. .................... |
| புத்தகம் | ரூ. 12.75 | ரூ. 20.00 | ரூ. .................... |

## விடைகள்


**13.** i) Flower ii) Kite iii) This is my father iv) That is my car v) உங்களுக்கு எத்தனை வயது vi) அவை எனது பேனைகள்

**14.** i) புகையிரத நிலையம் ii) தேநீர் குடியுங்கள் iii) விதுஹல்பதி iv) ப

**15.** i) எண்பத்தேழாயிரத்து ஐந்நூற்றுப் பத்து. ii) 10000+ 0000 + 500 + 70 + 8

**16.** 21 **17.** i) 12 ii) 0 **18.** vii, xii, xv, xx **20.** i) 0.3 ii) 02 கட்டங்கள்

**21.** 42 மாத்திரைகள் **22.**



### கல்வி tv CHANNEL-1

**07.02.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2

**07.02.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# குடிதண்ணீரை சேமியுங்கள்! மக்களிடம் அவசர கோரிக்கை

அக்கரைப்பற்று, பெப். 14

**அக்கரைப்பற்றில் எதிர்காலத்தில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதால் நீர்ப் பாவனையாளர்கள் தங்களுக்குத் தேவையான குடிதண்ணீரை தாங்கிகளில் சேமித்து வைக்குமாறு அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் யூ. கே. எம். முஸாஜித் தெரிவித்துள்ளார்.**

நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.

மேலும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய காரியாலயத்திற்குட்பட்ட பகுதிகளில், ஒரு மாதத்துக்கு மேல் நீர்ப் பாவனை கட்டணத்தை செலுத்தாதவர்கள் நிலுவை கட்டணத்தை செலுத்துமாறு,

அக்கரைப்பற்று, கல்முனை, மருதமுனை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், இறக்காமம், சம்மாந்துறை, ஆலையடிவேம்பு, பொத்துவில், கல்முனை ஆகிய பிரதேசங்களில் ஆறு மாதங்களாக மாதாந்த நீர்ப் பாவனை கட்டணம் செலுத்தப்படாமலுள்ளதாகவும், இவர்களுக்கு நீர் துண்டிப்பு தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இப்பிரதேசங்களில் உள்ள நீர்ப்பாவனையாளர்களின் நிலுவைத் தொகை மற்றும் பாவனை அளவு போன்றவற்றைக் கருத்தில் கொண்டே இணைப்பு துண்டிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்ட தொகை நிலுவையை செலுத்தாமல் உள்ள வாடிக்கையாளர்கள் தமது நீர்க்கட்டணத்தைச் செலுத்தி, அசௌகரியங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். நீர் துண்டிப்பு செய்யப்படும் வாடிக்கையாளர் நீர்க்கட்டண பட்டியல் தொகையுடன் தண்டப்பணத்தையும் முழுமையாக செலுத்திய பின்னரே மீளிணைப்பு வழங்கப்படுமெனவும் தெரிவித்தார். (ஐ)

# 10 போத்தல்கள் கசிப்புடன் வவுணதீவில் ஒருவர் கைது!

வவுணதீவில் விற்பனைக்காக 10 போத்தல்களில் கசிப்பை கொண்டு சென்ற ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், இதற்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளனர்.

வவுணதீவு விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலின்படி சம்பவதினமான நேற்றுமுன்தினம் காலை வவுணதீவு முள்ளாமுனையில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது மோட்டர்சைக்கிளில் பனையறுப்பான் பிரதேசத்தில் இருந்து கரவெட்டி பிரதேசத்துக்கு உரப்பை ஒன்றில் 10 போத்தல் கசிப்பை விற்பனைக்காக கொண்டு சென்றபோது குறித்த நபரை கைது செய்தனர்.

இதில், கைது செய்யப்பட்டவர் 26 வயது இளைஞர் என்று தெரிவிக்கப்பட்டது.

# காட்டு யானைகளால் சொத்துகளுக்கு சேதம்

கிண்ணியா, பெப். 14

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வானாறு, ஆயிலியடி கிராமங்களுக்குள் நேற்றுமுன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகளால் சொத்துக்களுக்கு பல சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

சுமார் 3 - 5 யானைகள் ஊருக்குள் புகுந்து வெதுப்பக உற்பத்திப் பொருட்களை உண்டதோடு அதன் உபகரணங்களையும் வெளியில் எடுத்து வீசியுள்ளன. இதனால் தாம் பெரும் நட்டத்தை எதிகொண்டுள்ளதாக வெதுப்பக உரிமையாளர் தெரிவித்தார். இதேபோன்று, சுமார் நூறு தென்னை மரங்கள் உள்ள தோட்டத்துக்குள் புகுந்த யானைகள் சுமார் 15இற்கும் மேற்பட்ட தென்னை மரங்களை அழித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர, யானைகளால் 2 ஏக்கர் வயல் நிலங்கள் நாசமாக்கப்பட்டன. அத்துடன், கடை ஒன்றையும் சேதப்படுத்தியுடன் அங்கிருந்த பழங்களையும் அழித்துள்ளன என்று மக்கள் தெரிவித்தனர். (ஐ)

# ஏறாவூரில் போக்குவரத்து சாலையின் கணக்காளர் அலுவலகம் திறப்புவிழா!



ஏறாவூர், பெப். 14

மட்டக்களப்பு - ஏறாவூர் போக்குவரத்துச் சாலையில் புதிதாக அமைக்கப்பட்ட, தனியான கணக்காளர் அலுவலகத் திறப்பு விழா சம்பிரதாயபூர்வமாக நேற்று முன்தினம் நடைபெற்றது.

இலங்கை போக்குவரத்து சபையின் ஏறாவூர்ச் சாலை 1998ஆம் ஆண்டில் உப சாலையாகத் திறக்கப்பட்ட காலம் தொடக்கம் தற்போது வரை மட்டக்களப்பு மற்றும் வாழைச்சேனை ஆகிய சாலைகளாலேயு நிதிக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக ஊழியர்கள் தமக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களையும் தாமதத்தையும் எதிர்நோக்கிவந்த நிலையில் புதிதாக அமைக்கப்பட்ட தனியான கணக்காளர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர்ச்சாலை முகாமையாளர் எம்.எம்.சைனி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிழக்குப் பிராந்திய நலன்புரி பிரிவுக்கான மனிதவள பிரதி முகாமையாளர் சேனநாயக்க சுமித் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன், பிராந்திய மனிதவள பிரதி முகாமையாளர் சன்ஜீவ உமேஷ், நிதி முகாமையாளர் சமன் ரத்னா யக்க, செயலாற்று முகாமையா ளர் எம். உவைஸ் மற்றும் பொது ஜன பெரமுன தொழிற்சங்க இணைப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மூங்கிலாறு பாதையை திருத்திதரக் கோரிக்கை

மண்டூர், பெப். 14

போரதீவுப்பற்று பிரதேச சபையின் மண்டூர் கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட மூங்கிலாறு - சமுலையடிவட்டை பாதை, குண்டும் குழியுமாக காணப்படுவதால் பாதையைப் பயன்படுத்துவோர் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் விசனம் தெரிவிக்கப்பட்டது.

மண்டூர் 14 ஆம் கிராம சந்தியிலிருந்து மூங்கிலாறு பாலத்தின் ஊடாக நெடிய வட்டை, ஆணைகட்டியவெளி, சின்னவத்தை ஊடாக கொணகொல்லை அம்பாறை - மகோயா பாதையை சென்றடையும் பிரதான பாதையே இவ்வாறு சேதமடைந்து காணப்படுகிறது.

பாதை சேறும், சகதியுமாக காணப்படுவதனால் அவசரத் தேவையின் நிமித்தம் பயணிப்போர் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தொலைதூர மாற்றுப் பாதைகளை பயன்படுத்த வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்படுதாகவும் தெரிய வருகிறது.



# காத்தான்குடி மதரசாக்களில் வெள்ளிவரை குர்ஆன் விழா!

காத்தான்குடி, பெப். 14

காத்தான்குடி திருக் குர்ஆன் மதரசாக்களில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை அல்குர்ஆன் விழா நடைபெறவுள்ளது.

காத்தான்குடி குர்ஆன் மதரசாகள் அபிவிருத்திச் சங்கத்தின் 34ஆவது வருடமாக. 2020ஆம் ஆண்டுக்காக நடத்தப்பட்ட அல்குர்ஆன் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

அல்குர்ஆன் இறுதிப் பரீட்சையில் காத்தான்குடியிலும் காத்தான்குடி அண்மித்துள்ள முஸ்லிம் பிரதேசங்களிலுமுள்ள மதரஸாக்களில் இருந்து பரீட்சைக்காக தோற்றிய 749 மாணவர்களில் 706 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

காத்தான்குடி முதலாம் குறிச்சி பெரிய மீரா ஜும்மா பள்ளிவாயலில் நடைபெற்ற நிகழ்வில் குர்ஆன் மதரசாக்கள் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் மௌலவி எம் .ஐ. ஆதம் லெவ்வை தலைமையில் நடைபெற்ற விழாவில் உலமாக்கள், பிரமுகர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இங்கு, எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை அல்குர்ஆன் விழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கைபேசியில் சஹ்ரான் படம் 9 பேரிடம் தீவிர விசாரணை!

மட்டக்களப்பு, பெப். 14

கைபேசியில் சஹ்ரானின் படங்களை வைத்திருந்த 9 பேர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் ரிதிதென்னை பகுதியில் நேற்றுப் பயணித்த வான் ஒன்றை வழிமறித்த இராணுவத்தினர் சோதனையிட்டனர்.

தடுப்பூசி அட்டையை இராணுவத்தினர் பரிசோதித்தபோது, பயணி ஒருவர் தனது கைபேசியில் படம்பிடித்திருந்த தடுப்பூசி அட்டையை காண்பித்துள்ளார். இதன்போது, அவரின் கைபேசியில் ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியான சஹ்ரான் காசிமின் படத்தை வைத்திருந்தமையை அவதானித்த சிப்பாய் பயணித்த அனைவரையும் மறித்து வைத்து விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். (ஐ)

# உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் சந்திப்பு

அக்கரைப்பற்று, பெப். 14

அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச சபைகளின் தவிசாளர்களின் ஒன்றுகூடல் அம்பாறைக்கு மேற்கேயுள்ள நாமல் ஓயா பிரதேச சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் பிரதேச சபைகளின் செயலாளர்களும் கலந்துகொண்டார்கள்.

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினியின் நெறிப்படுத்தலில், நாமல்ஓயா பிரதேச சபை தவிசாளரின் தலைமையில் இந்த ஒன்றுகூடல் இடம்பெற்றது.

இதன்போது கடந்த கால பிரதேச சபையினுடைய செயல்பாடு எதிர்கால செயல்பாடு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

எதிர்கால திட்டமிடல் தொடர்பாக பல முன்னுதாரணமான கருத்துக்களை தவிசாளர்களும் செயலாளர்களும் முன்வைத்தனர். மூவின தமிழ், சிங்கள, முஸ்லிம் பிரதேச சபைகளை வழிநடத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது. (ஐ)



# கனடா-அமெரிக்க எல்லைகளை முடக்குவதற்கு தடை உத்தரவு!

## ஒன்ராறியோ உயர் நீதிமன்றம் விடுத்தது

ஒட்டாவா, பெப். 14

அமெரிக்காவுடனான முக்கிய எல்லைக் கடவைகளை முடக்கும் வகையிலான போராட்டங்களுக்கு தடை உத்தரவு பிறப்பித்து கனடா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஒன்ராறியோ உயர் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்தத் தடை உத்தரவு உள்ளூர் நேரப்படி கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணி முதல் அமுலுக்கு வந்தது.

ஒன்ராறியோவின் வின்ட்சரை மிச்சிகனில் உள்ள டெட்ராய்ட் நகருடன் இணைக்கும் அம்பாசிடர் பாலம் கடந்த ஐந்து நாட்களாக முற்றுகையிடப்பட்டுள்ளது.

கொவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிரான சரக்கு வாகன சாரதிகளின் போராட்டங்கள் ஏனைய எல்லைக் கடவைகளிலும், ஒட்டாவாவிலும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் வின்ட்சர் நகர நிர்வாகம் மற்றும் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தியாளர்கள் சங்கம் ஆகியவற்றினால் இந்த தடை உத்தரவு கோரும் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த முற்றுகைப் போராட்டம் காரணமாக நாள் ஒன்றுக்கு 50 மில்லியன் டொலர் வரை இழப்பு ஏற்படுவதாக மனுதாரர்கள் வாதிட்டனர்.

நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து, எல்லைக் கடவைகளை முற்றுகையிடுவது கிரிமினல் குற்றம் என்பதை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தெளிவுபடுத்தி வின்ட்சர் பொலிஸார் அறிக்கை வெளியிட்டனர்.

தடை உத்தரவை மீறுவோரின் வாகனங்கள் கைப்பற்றப்படும். அத்துடன், தடையை மீறும் வாகனங்கள், வாகன சாரதிகள் அமெரிக்காவிற்குள் நுழைய முடியாத நிலை ஏற்படுத் எனவும் பொலிஸார் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இதேவேளை, கனேடிய தலைநகரான ஒட்டாவாவின் மையத்தில் நூற்றுக்கணக்கான எதிர்ப்பாளர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் கனடா - அமெரிக்கா இடையிலான எல்லைகள் முடக்கப்படுவது குறித்து பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அமெ ரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை தொடர்பு கொண்டு பேசினார்.

எல்லைகள் முடக்கப்படுவதால் இரு நாடுகளும் எதிர்கொண்டுள்ள சவால்கள் இதன்போது விவாதித்ததாக ட்ரூடோ கூறினார்.

அமெரிக் காவுடனான வர்த்தகத்தை விரைவில் சுமுகமாக்கவும் இதன்போது உறுதியளித்ததாகவும் பிரதமர் ட்ரூடோ தெரிவித்தார். (அ)



# ஹாக்னி விக் பார் தளம் சரிந்து 13 பேர் காயம்

லண்டன், பெப். 14

கிழக்கு லண்டனில் உள்ள பப் ஒன்றில் தளம் இடிந்து விழுந்ததில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இதனை அடுத்து குறித்த சம்பவத்தில் சிக்கிய 7 பேரை தீயணைப்பு வீரர்கள் மீட்டதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மூன்று பேர் பலத்த காயம் அடைந்ததாகவும், மேலும் 10 பேருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டதாகவும் துணை மருத்துவர்கள் தெரிவித்தனர். (அ)



# கொரோனாவுக்கு எதிரான போர் பாரிஸுக்குள் நுழைந்தோர் கைது!

பரிஸ், பெப். 14

கொரோனா கட்டுப்பாடுகளுக்கு எதிரான போராட்டத்தின் ஒரு பகுதியாக பாரிஸ/க்குள் நுழைய முயன்ற நூற்றுக்கணக்கான வாகனங்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

"சுதந்திர கான்வாய்" தடை உத்தரவை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீறியதை அடுத்து அவர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை தாக்குதலையும் மேற்கொண்டனர்.

இதன்போது 300க்கும் மேற்பட்ட டிக்கெட்டுகள் வழங்கப்பட்டதாகவும், 54 பேர் கைது செய்யப்பட்டதாகவும் உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டார்மானின் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்களை தடுக்கும் முயற்சியில் அடுத்த மூன்று நாட்களுக்கு 7,000க்கும் மேற்பட்ட அதிகாரிகளை நிறுத்தியுள்ளனர்.

# உக்ரைனை விட்டு வெளியேறுமாறு மேலும் பல நாடுகள் எச்சரிக்கை!



கிவி, பெப். 14

அமெரிக்காவைத் தொடர்ந்து இங்கிலாந்து, கனடா, நெதர்லாந்து, லாட்வியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா உள்ளிட்ட மேலும் பல நாடுகள் உக்ரைனில் இருந்து தங்கள் பிரஜைகளை உடன் வெளியேறுமாறு எச்சரித்துள்ளன.

உக்ரைன் மீது எந்நேரத்திலும் படையெடுக்கும் வகையில் ரஷ்யா தனது படைகளை முழுமையான தயார் நிலையில் வைத்துள்ளதால் உக்ரைனில் உள்ள தனது பிரஜைகளை அடுத்த 48 மணி நேரங்களில் வெளியேறுமாறு அமெரிக்கா கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் எச்சரிக்கை விடுத்தது.

வான் வழி குண்டுவீச்சுடன் உக்ரைனைக் கைப்பற்றும் ரஷ்யாவின் படையெடுப்பு ஆரம்பிக்கலாம். இது உக்ரைனில் உள்ள அமெரிக்கர்களை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சிகளைக் கடினமாக்குவதுடன், ஆபத்தானதாக அமையலாம் என வெள்ளை மாளிகை கடந்த வெள்ளிக்கிழமை அறிவுறுத்தியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா எந்த நேரமும் தாக்குதல் நடத்தகூடிய அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதால் உக்ரைனில் தங்கியுள்ள அனைத்து அமெரிக்கர்களும் உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த வியாழக்கிழமை அறிவுறுத்தினார்.

உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமித்தால் அமெரிக்கர்களை மீட்க படைகளை அனுப்ப மாட்டேன் எனவும் பைடன் கூறினார். உக்ரைன் - ரஷ்யா இடையிலான பதற்ற நிலை விரைவில் மோசமான கட்டத்தை அடையலாம் என்றும் அவர் எச்சரித்திருந்த நிலையில் மீண்டும் 48 மணி நேரங்களுக்குள் வெளியேறுமாறு அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அமெரிக்காவை தொடர்ந்து உக்ரைனை விட்டு வெளியேறுமாறு பல நாடுகளும் தங்கள் நாட்டு மக்களை வலியுறுத்தியுள்ளன. அவற்றில் இங்கிலாந்து, கனடா, நெதர்லாந்து, லாட்வியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகியவையும் அடங்கும்.

ஆனால் இதனை மறுத்துள்ள ரஷ்ய வெளியுறவு அமைச்சு, மேற்கத்திய நாடுகள் ரஷ்யா குறித்து தவறான தகவல்களை பரப்புவதாக குற்றஞ்சாட்டியுள்ளது. (அ)



# சீனாவுக்கு எதிராக சாலமன் தீவுகளின் தூதரகத்தை மீள திறக்க அமெ. முடிவு!

நியூயோர்க், பெப். 14

சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் பசிபிக் தீவு நாடுகளில் ஒன்றான சாலமன் தீவுகளில் தூதரகத்தை மீண்டும் நிறுவப் போவதாக அமெரிக்கா கூறியுள்ளது.

பிஜியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் அண்டனி பிளிங்கன் இந்த முடிவை அறிவித்தார்.

சீனா "ஆக்ரோஷமாக" அரசியல் மற்றும் வணிகத் தலைவர்களை சாலமன்ஸில் ஈடுபடுத்த முயல்கிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனேவ அதன் நடவடிக்கைகள் உண்மையாக கவலைகளை ஏற்படுத்துகின்றது என அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

1993 இல் சாலமன் தீவுகளில் இருந்த தூதரகத்தை மூடிய அமெரிக்கா, அந்நாட்டின் பொருளாதாரப் பிரச்னைகள் மற்றும் சீனாவுக்கு எதிரான போராட்டங்களை அடுத்து இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஈழநாடு



# ஆஸிக்கு எதிரான ரி - 20; இலங்கை அணி தோல்வி!




சிட்னி, பெப். 14

இலங்கை அணிக்கு எதிரான இருபது - 20 தொடரின் முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி டக்வேர்த் - லூயிஸ் முறையில் 20 ஓட்டங்களால் வெற்றி பெற்று 5 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றது.

முதல் போட்டி அவுஸ்திரேலியாவின் சிட்னியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக துடுப்பாட்டத்தில் பென் மக்டிரமெண்ட் 53 ஓட்டங்களையும் மார்க்கஸ் ஸ்ரொய்னிஸ் 30 ஓட்டங்களையும் அதிகப்பட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர்.

இலங்கை அணி சார்பில் பந்து வீச்சில் வனிந்து ஹசரங்க 3 விக்கெட்களையும் சாமிக கருணாரத்ன, பினுர பெர்னாண்டோ மற்றும் துஷ்மந்த சாமீர ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

இந்நிலையில், 20 ஓவர்களில் 150 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி சீரான இடைவெளி களில் விக்கெட்களை பறிகொடுத்து ஆடிவந்த நிலையில், மழை குறுக்கிட்டதால் போட்டி 19 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு வெற்றி இலக்காக 143 ஓட்டங்கள் வழங்கப்பட்டது.

எனினும், இலங்கை அணி வீரர்கள் துடுப்பாட்டத்தில் சோபிக்க தவறியதால் 19 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 122 ஓட்டங்களை மாத்திரம் இலங்கை அணி பெற்றது. இதனால், 20 ஓட்டங்களால் இலங்கை தோல்வியை தழுவியது.

இலங்கை அணிசார்பில் அதிக படியாக, பெத்தும் நிசங்க 36 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணியின் ஜோஷ் ஹசில்வூட் 12 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இதற்கமைய, அவுஸ்திரேலிய அணி 5 போட்கள் கொண்ட இருபது - 20 தொடரில் 1 - 0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கின்றது. போட்டியின் நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் அடம் ஷம்பா தெரிவானார். (ஐ)

# ஐ. பி. எல். பெரு ஏலம் ஒரே பார்வையில்!




பெங்களூர், பெப். 14

2022ஆம் ஆண்டுக்கான ஐ. பி. எல். பெரும் ஏலத்தில் நேற்று முன்தினம் இந்திய வீரரான இஷான் கிஷனை 15.25 கோடி இந்திய ரூபாய்க்கு வாங்கியது மும்பை இந்தியன்ஸ் அணி. தீபக் ஷாகரை ரூ.14 கோடிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும், ஸ்ரேயாஸ் ஐயரை ரூ.12.25 கோடிக்கு கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியும் ஏலம் எடுத்தன.

10.75 போடி இந்திய ரூபாய்க்கு இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஹர்சல் பட்டேலையும் ஏலம் எடுத்தது பெங்களூர் அணி. தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் காகிசோ ரபாடாவை ரூ. 9.25 கோடிக்கு பஞ்சாப் அணி வாங்கியது. லக்னோ அணி ரூ.8.75 கோடிக்கு மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரரான ஜேசன் ஹோல்டரையும், சன் ரைசர்ஸ் ஹைதராபாத் ரூ.8.75கோடிக்கு இந்திய சகலதுறை வீரரான வாஷிங்டன் சுந்தரையும் ஏலம் எடுத்தன.

மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடி துடுப்பாட்ட வீரரான ஷிம்ரன் ஹெட்மயரை ரூ.8.50 கோடிக்கு ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும், குர்ணல் பாண்டியாவை ரூ.8.25 கோடிக்கு லக்னோ அணியும், ஷிகர் தவானை ரூ.8.25 கோடிக்கு பஞ்சாப் அணியும் ஏலம் எடுத்தன.

டில்லி கப்பிட்டல்ஸ் ரூ.6.50 கோடிக்கு அவுஸ்திரேலியாவின் மிட்செல் மார்ஷையும், டேவிட் வோர்ணரை ரூ.6.25 கோடிக்கும் வாங்கியது.

குஜராத் ரைட்டன்ஸ் இங்கிலாந்தின் ஜசன் ராயை ரூ.2 கோடிக்கும், முகமது ஷமியை ரூ.6.25கோடிக்கும் வாங்கியது. கொல்கத்தா அணி நித்திஷ் ராணாவை ரூ.8 கோடிக்கும், அவுஸ்திரேலியாவின் பட் கம்மின்ஸை ரூ.7.25 கோடிக்கும் எடுத்தது. லக்னோ அணி தென்னாபிரிக்காவின் குயிண்ரன் டி கொக்கை ரூ.6.75 கோடிக்கும், இந்திய வீரர்களான மனீஷ் பாண்டேவை ரூ. 4.60 கோடிக்கும், தீபக் ஹூடாவை ரூ.5.75 கோடிக்கும் ஏலம் எடுத்தது.

பஞ்சாப் அணி, இங்கிலாந்தின் ஜொனி பெயர்ஸ்ரோவை ரூ.6.75 கோடிக்கு வாங்கியது. ராஜஸ்தான் றோயல்ஸ் அணி நியூசிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் டிரெண்ட் போல்ட்டை ரூ.8 கோடிக்கும், இந்திய இளம் வீரர் தேவ்தத் படிக்கலை ரூ.7.75 கோடிக்கும், ரவிச்சந்திரன் அஸ்வினை ரூ.5 கோடிக்கும் ஏலம் எடுத்தது. றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், தினேஷ் கார்த்திக்கை ரூ.5.50 கோடிக்கும், தென்னாபிரிக்காவின் டூ பிளெசிஸை ரூ.7 கோடிக்கும் வாங்கியது. முஸ்டாபிஸூர் ரஹ்மான், குல்தீப் யாதவ் ஆகியோரை தலா ரூ.2 கோடிக்கு டில்லி வாங்கியது.

ஹைதராபாத் அணி, ரூ.10.75 கோடிக்கு மேற்கிந்தியத் தீவுகளின் நிக்கலஸ் பூரனை ஏலம் எடுத்தது. நியூசிலாந்தின் பெர்குசனை ரூ.10 கோடிக்கு குஜராத் அணி வாங்கியது. ராஜஸ்தான் அணி, இந்திய இளம் வேகப்பந்து வீச்சாளர் பிரஷித் கிருஷ்ணாவை ரூ.10 கோடிக்கு ஏலம் எடுத்தது. இடது கை வேகப்பந்து வீச்சாளரான நடராஜனை ரூ.4 கோடிக்கு ஹைதராபாத் அணி வாங்கியது.

இங்கிலாந்தின் மார்க் வூட்டை ரூ.7.5 கோடிக்கு லக்னோ அணி யும், புவனேஷ்வர் குமாரை ரூ.4.20கோடிக்கு ஹைதராபாத் அணியும், ஜோஸ் ஹசல்வூட்டை ரூ.7.75 கோடிக்கு பெங்களூர் அணியும், ஷர்துல் தாக்குரை ரூ.10.75 கோடிக்கு டில்லி அணியும் ஏலம் எடுத்தன.

தமிழக வீரர் ஷாருக்கானை ரூ.9 கோடிக்கு பஞ்சாப் அணி ஏலம் எடுத்தது. இதன் மூலம் இந்திய அணிக்காக விளையாடாத வீரர்களில் அதிகதொகைக்கு ஏலம் எடுக்கப்பட்ட வீரர் என்ற பெருமையை பெற்றார்.

சுரேஷ் ரெய்னா, ஸ்ரீவ் ஸ்மித், ஷகிப் அல் ஹசன், டேவிட் மில்லர், ரித்திமான் சஹா, முகமது நபி, மேத்யூ வேட், சேம் பில்லிங்ஸ், இம்ரான் தகிர், உமேஷ் யாதவ் உள்ளிட்டோரை முதல் நாளில் எந்த அணிகளும் ஏலம் எடுக்கவில்லை.



## வனிந்து ஹசரங்கவுக்கு பெங்களூர் ரூ. 29 கோடி!

பெங்களூர், பெப். 14

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான வனிந்து ஹசரங்க 10.75 கோடி இந்திய ரூபாய்க்கு (நம் நாட்டு மதிப்பில் சுமாராக 29 கோடி ரூபாய்) றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியால் ஏலம் எடுக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திர வீரராக வலம் வரும் வனிந்து ஹசரங்க பந்துவீச்சு, துடுப்பாட்டம் மற்றும் களத்தடுப்பு என சகல துறைகளிலும் ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகிறார்.

ஐ.சி.சி.யின் சர்வதேச இருபதுக்கு - 20 பந்துவீச்சாளர்கள் பட்டியலில் 797 புள்ளிகளுடன் முதலிடத்தை வகிக்கும் வனிந்து, ஐ.சி.சி.யின் இருபதுக்கு 20 சகல துறை ஆட்டக்காரர்களுக்கான தரவரிசையில் 5 ஆவது இடத்திலும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல மாத இடைவெளியின் பின்னர் இலங்கை வீரர் ஒருவர் அதிக தொகைக்கு ஏலம் எடுக்கப்பட்டிருப்பது ஐ. பி. எல்லில் இது முதல்முறை என்பதும் நினைவுகூரத்தக்கது. (ஐ)

## மாறாத சென்னை அணி!

பெங்களூர், பெப். 14

ஐ. பி. எல். ஏலத்தில் சென்னை அணி ஏற்கனவே இருந்த வீரர்களை வாங்குவதிலேயே அதிக கவனம் செலுத்தியது. ஜடேஜா (16 கோடி இந்திய ரூபாய்), டோனி (ரூ. 12 கோடி), மொயீன் அலி (ரூ. 8 கோடி), ருதுராஜ் (ரூ. 6 கோடி) என நான்கு வீரர்கள் ஏற்கனவே தக்கவைக்கப்பட்டனர்.

சகலதுறை வீரர் தீபக் சகார், ரூ. 14 கோடிக்கு வாங்கப்பட்டார். அம்பதி ராயுடு (ரூ. 6.75 கோடி), பிராவோ (ரூ. 4.40 கோடி), உத்தப்பா (ரூ. 2 கோடி), முகமது ஆசிப் (ரூ. 20 லட்சம்), தேஷ்பாண்டே (ரூ. 20 லட்சம்) மீண்டும் அணிக்கு திரும்பினர்.

இதேவேளை, தீபக் சஹார் டோனியின் விலையை விட அதிக விலைக்கு வாங்கப்பட்டுள்ளார். டோனி 12 கோடி இந்திய ரூபாய்க்கு தக்க வைக்கப்பட்டார். ஆனால், சகாருக்கு 14 கோடி இந்திய ரூபாய்க்கு வாங்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## துஷ்மந்த சாமீரவை வாங்கியது லக்னோ!

பெங்களூர், பெப். 14

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப் பந்துவீச்சாளரான துஷ்மந்த சாமீரவை லக்னோ அணி 2 கோடி இந்திய ரூபாய்க்கு - சுமாராக 5.4 கோடி இலங்கை ரூபாய்க்கு வாங்கியது.

ஐ. பி. எல்லின் மிகப்பெரும் ஏலம் பெங்களூரில் நடக்கிறது. இதன் இரண்டாம் நாளான நேற்றும் வீரர்கள் ஏலம் தொடர்ந்தது.

இலங்கையின் வேகப்பந்து வீச்சாளரான துஷ்மந்த சாமீரவின் அடிப்படை விலை 50 இலட்சம் இந்திய ரூபாயாக இருந்தது. இவருக்கு, 2 கோடி இந்திய ரூபாய் கொடுத்து வாங்கியது ஐ. பி. எல்லின் புதிய அணியான லக்னோ சுப்பர் ஜியான்ட்ஸ் அணி.

இதேபோன்று மற்றோரு சுழல் பந்துவீச்சாளரான மகேஷ் தீக்ஷனவை 70 இலட்சம் இந்திய ரூபாய் கொடுத்து வாங்கியது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் கைவிடப்பட்ட நிலையில் மீட்பு!

வடமராட்சி, பெப். 14

தம்பசிட்டியில் 3 நாட்களுக்கு முன்னர் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் கைவிடப்பட்ட நிலையில் அந்தப் பகுதியிலேயே நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை 10 ஆம் திகதி மேலைப் புலோலி தம்பசிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருட்டுப் போயிருந்தது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை தம்பசிட்டி கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக மோட்டார் சைக்கிள் ஒன்று கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து அங்கு சென்ற பொலிஸார் திருட்டுப் போன மோட்டார் சைக்கிளை மீட்டனர். (ஐ-2)

# 13ஐ கோருவதும் நிராகரிப்பதும் ஆசனங்களுக்கான போட்டியே!

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி

யாழ்ப்பாணம், பெப். 14

இலங்கையின் அரசமைப்பில் இருந்துவரும் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் தனது அழுத்தத்தை இலங்கை அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும் எனத் தமிழ் அரசுக் கட்சி உள்ளிட்ட ஆறு தமிழ்க் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடந்த மாதம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர். இதேவேளை பதின்மூன்றாம் திருத்தம் ஒற்றையாட்சிக்கு உட்பட்டதென்றும் அதனை நிராகரிக்க வேண்டும் எனக் கூறி அதனைச் சவப்பெட்டியில் வைத்துக் கூட்டம் நடத்தியிருக்கிறது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

இந்த இரு தமிழ்த் தேசிய வாதத் தரப்புகளின் பதின்மூன்றாவது திருத்தம் பற்றிய ஏட்டிக்குப் போட்டியான செயல்பாடுகளையும் வாதப் பிரதிவாதங்களையும் நோக்கும்போது, அன்றைய பொன்னம்பலம் - செல்வநாயகம் காலப் பாராளுமன்றப் பதவிகளுக்காகப் போட்டியிட்டு வந்த தமிழர் மேட்டுக்குடி ஆதிக்க அரசியலின் தொடர்ச்சியையே காண முடிகிறது. இது ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தைத் தொடர்ந்தும் தமிழ்த் தலைமைகள் தமது பழைமைவாதப் பிற்போக்குத் தமிழ்த் தேசியவாத நிலைப்பாடுகளாலும் தூர நோக்கற்ற கொள்கைகளாலும் ஏமாற்றி வரும் போக்கையே வெளிக்காட்டி நிற்கிறது. இவ்வாறு தமிழ்த் தலைமைகளிடையே இடம்பெற்று வரும் பதின்மூன்றாவது திருத்தம் பற்றிய அண்மைய விவாதம் பற்றி புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் அவ் அறிக்கையில், பதின்மூன்றாவது திருத்தம் என்பது முப்பத்து நான்கு வருடங்களுக்கு முன்பு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கையின் அரசியல் யாப்பிற்கு கொண்டுவரப்பட்ட ஒரு திருத்தமாகும். இது அன்றைய சூழலில் இலங்கையின் இன முரண்பாட்டினைப் பயன்படுத்தித் தமது பிராந்திய மேலாதிக்க நலன்களுக்காக இந்தியாவினால் வலிந்து திணிக்கப்பட்டதாகும். தமிழ் மக்கள் உள்ளிட்ட ஏனைய மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாததும், மிகக் குறைந்த அதிகாரங்களைக் கொண்டதாகவும் பதின்மூன்றாவது திருத்தம் அமைந்திருந்த காரணங்களால் எமது கட்சி அன்று பதின்மூன் றாவது திருத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. அதற்கு கீழ் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் பங்குகொள்ளவும் இல்லை.

ஆனால் கடந்த முப்பத்து நான்கு ஆண்டுகளில் தொடர்ந்து வந்த சிங்கள பௌத்த ஆளும் வர்க்கக் கட்சிகள் பல வழிகளிலும் பதின்மூன்றாவது திருத்தத்தை செயலிழக்கச் செய்யவும் இல்லாதொழிக்கவும் முயன்று வந்துள்ளன. இச் சூழலிலேயே இலங்கை அரசியல் யாப்பில் தேசிய இனப்பிரச்சினையைக் குறைந்த அளவிலேனும் அடையாளப்படுத்தும் ஒன்றாக பதின்மூன்றாவது திருத்தம் இருந்து வரும் யதார்த்தத்தை நிராகரிக்க முடியாது. பதின்மூன்றாவது திருத்தத்திலிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் உட்படுத்திக் கொள்வதுடன் நடைமுறைப்படுத்தாது விடப்பட்டவற்றை அமுல்படுத்த வேண்டும்.

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை நிராகரிப்பதற்குப் பதிலாக அரசியல் யாப்பு அடிப்படையில் மேலும் அதற்குரிய பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெற்று விரிவாக்கி வலுப்படுத்தி முன்னெடுக்க வேண்டும். இதனை வலியுறுத்தி மக்களை ஐக்கியப்படுத்தும் மக்கள் திரள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதனைச் செய்யாது இந்தியாவிடம் மண்டியிடுவதோ அல்லது அமெரிக்காவிடம் கெஞ்சி நிற்பதோ அல்லது புலம்பெயர்ந்த தமிழர் மேட்டுக்குடி அமைப்புக்களையும் அவர்களது பணக் கட்டுகளையும் நம்பி இனவாத முழக்கங்களை எழுப்பி வாக்குவங்கி அரசியல் செய்வதோ பயனற்ற வையாகும் - என்றுள்ளது. (ஐ-2)

# கட்டுத்துவக்கு வெடித்ததில் பொலிஸ் கான்ஸ்டபிள் காயம்

கொழும்பு, பெப் 14

பதுளை கஹஉட்டருப்ப பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேன்னேஹேன பொதுப்பிட்டி பிரதேசத்தில், பதுளை குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் இணைந்து நேற்று முன்தினம் கஞ்சா சேனையை சுற்றிவளைத்த போது, கட்டுத்துவக்கு வெடித்ததில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்த நிலையில் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கட்டுத்துவக்கு வைத்திருந்த கஹஉட்டருப்ப பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயது நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# நாட்டின் பணவீக்கம் 24 சதவீதமாக உயர்வு

கொழும்பு, பெப்.

நாட்டில் பணவீக்கம் 24 சதவீதமாக அதிகரித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹீன்ஸ் நெல்சன் தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தை முன்னிலைப்படுத்தியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. 69 இலட்சம் மக்களின் வாக்குகளையும் பெற்றுக்கொண்டது. பாராளுமன்றத்தில் 20ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றிக்கொண்டனர்.

மூன்றில் இரண்டு பலத்தை கொண்டுள்ள இந்த அரசாங்கம், தற்போது ஒவ்வொரு நாடுகளுக்கும் சென்று டொலருக்கு பிச்சையெடுக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஊழல் மோசடிகள் அதிகம் இடம்பெறும் நாடுகளில் எமது நாடு 102ஆவது இடத்துக்கு வந்துள்ளது. அதேபோன்று உலகில் பொருளாதாரம் சீர்குலைந்த நாடுகளை எடுத்துக்கொண்டால் ஆஜன்டினா முதலாவது இடத்திலும் எமது நாடு இரண்டாவது இடத்திலும் உள்ளது. அதேபோன்று பணவீக்கம் அதிகரித்தமையை எடுத்துக்கொண்டால், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது நாம் 12ஆவது இடத்தில் இருக்கின்றோம்.

நூற்றுக்கு 24 சதவீதமாக பணவீக்கம் அதிகரித்துள்ளது. அரசாங்கம் விவசாயிகளுக்கு பெரும் அநீதியை இழைத்துள்ளது. எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பை வழங்கிய பிரிவினராக விவசாயிகள் உள்ளனர். இந்நாட்டில் ஒட்டுமொத்த விவசாயிகளும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய பங்குதாரர்களாக விளங்குகின்றனர். நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் தொற்று காரணமாகவே விவசாயிகளுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது - என்றார்.

# ஆளுநரின் செயல்களால் பொற்காலம் உருவாகும்!

## காரைநகர் தவிசாளர் சொல்கிறார்

மானிப்பாய், பெப். 14

கடந்த காலங்களில் வடக்கு மாகாண ஆளுநர்களாக செயற்பட்டவர்கள் வடக்கு மாகாண வளர்ச்சி - அபிவிருத்தியில் பின்னோக்கிய பார்வையே கொண்டிருந்தனர். ஆனால், தற்போது ஆளுநராக பொறுப்பேற்றிருக்கும் ஜீவன் தியாகராஜா தன்னை முழுமையாக அர்ப்பணித்து துரித அபிவிருத்தியை நோக்கி வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் ஒரே பார்வையில் முன்னெடுத்து வருகின்றார்.

இவரின் துரித அபிவிருத்தி செயல்பாட்டின் மூலம் அடுத்த ஐந்தாண்டுகள் வடக்கு மக்களுக்கு பொற்காலமாக மாறும் என தெரிவித்தார் காரைநகர் பிரதேச சபை தவிசாளர் மயிலன் அப்புத்துரை.

தீவக பிரதேச அபிவிருத்தி விரைவில் பல அபிவிருத்தி முன்னோட்டங்களை காணும் எனும் தலைப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாண அரச நிர்வாக செயற்பாடு முன்னெப்போதும் இல்லாதவாறு தற்போது சகல துறைகளிலும் துரித முன்னேற்ற அபிவிருத்தி செயற்பாடுகளை அவதானிக்க முடிகின்றது.

ஆளுநர் நோக்கு செயல்பாட்டின் ஊடாக வடக்கில் உள்ள அரசாங்க நிர்வாக செயல்பாட்டினை ஒவ்வொரு அரச நிறுவனமூடாக முன்னகர்த்தி வருவதுடன் மக்களுக்கு எந்த துறைகளில் சேவை பின்நிற்கின்றதோ அந்த சேவைகள்,தொடர்பில் உடன் கவனம் செலுத்துப்படுவதை அவதானிக்கிறோம் - என்றும்கூறினார். (ஐ - 5)

# சுயநிர்ணயம் மறுக்கப்படும்போது உரிமை போராட்டம் தொடங்குகிறது

## சட்டத்துறை விரிவுரையாளர் ஹக்கீம்

மானிப்பாய், பெப். 14

கௌரவம் - சமத்துவம் - சுயநிர்ணயம் ஆகிய மூன்றும் மனிதனுக்கு இன்றியமையாத விடயங்களாகும். இந்த விடயங்களில் ஏதாவது ஒன்று கிடைக்காதவிடத்து மனிதன் சிந்திக்கத் தொடங்குகின்றான் இவ்வாறு தெரிவித்தார் கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் சட்டத்தரணியுமான எம். ஏ. எம். ஹக்கீம்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் கற்கை நெறியில் பயின்ற மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு தலைவர் எஸ். யுகேந்திரா தலைமையில் இடம்பெற்றது. இதன் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.ஒவ்வொரு மனிதனும் கௌர வம் - சமத்துவம் - சுய நிர்ணய உரிமைகளுடன் முழுமையாக வாழவே எத்தனிக்கின்றான். இந்த உரிமைகள் எங்கு மறுக்கப்படுகின்றதோ அங்கு உரிமைக்கான போராட்டம் விரிவடைகின்றது.

இன்றைய சூழலில் மக்கள் பல்வேறு விதமான இடர்களுக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். அதனைவிட மாறாக இன்று நவீன தொழில்நுட்பத்துக்கு எதிராக கிளர்ந்து எழுந்து போராட வேண்டிய காலமாக மாறிவருகின்றது - என்றார். (ஐ- 5)

# இருவருக்கு இடையில் ஏற்பட்ட முறுகலில் ஒருவர் படுகொலை

கொழும்பு, பெப்.14

இரத்தினபுரி -குருவிட்டை - பொரலுவ பிரதேசத்தில், வீடொன்றில் இருவருக்கு இடையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட முறுகலில் ஒருவர் கூரிய ஆயுதமொன்றால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார் என்று குருவிட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

பொரலுவை, ஏரத்ன பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயது நபரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் தெரணியகல பிரதேசத்தை சேர்ந்த 56 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் குருவிட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

## தனிநாட்டை...

டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியில் இடம்பெற்ற விவாதத்தில் என்னுடன் பங்குகொண்டிருந்த ஈ. பி. ஆர். எல். எவ் அமைப்பைச் சேர்ந்த சுரேஷ் பிறேமச்சந்திரன் விடுதலைப் புலிகள் இயக்கம் தனி நாட்டுக்காகப் போராடி அவர்கள் எதனையும் சாதித்திருக்கவில்லை என்றும், தமிழர்கள் தேர்தல்களில் ஆணை வழங்கிய, தமிழ் மக்களின் இருப்புக்கு குறைந்தபட்ச பாதுகாப்பையாவது வழங்கக்கூடிய தேசம் அங்கீகரிக்கப்பட்ட, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய நாம் (TNPF) வலியுறுத்தும் சமஷ்டிக்கும் வழிவரைபடம் இல்லை என்றும் கூறி மக்கள் மனதில் அவநம்பிக்கையை ஏற்படுத்தி, இருப்பதை யாவது தக்க வைக்க வேண்டும் என்ற போர்வையில் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு ஆறு கட்சிகள் கூட்டாக கோரும் துரோக நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்கு முயன்றிருந்தார்.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சு மேசையில், ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயமானதும் சாத்தியமானதுமான தீர்வை பரிசீலிப்பதற்கு தயாராகவே இருந்தார்கள் என்ற உண்மையை பதிவு செய்யவேண்டிய கடமையும் பொறுப்பும் எனக்கு ஏற்பட்டது.

அந்த வகையில் விடுதலைப் புலிகள் தமிழீழத்திற்காக போராடி வந்த நிலையில் அரசுடன் நேரடியாக இடம்பெற்ற பேச்சுக்களிலும் சர்வதேச மத்தியஸ்தத்துடன் இடம்பெற்ற பேச்சுக்களின்போதும் தமிழ்த் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கக்கூடிய தீர்வை அரசுத் தரப்பு முன் வைத்தால் பரிசீலிக்கத் தயாராக இருந்தார்கள் என்ற உண்மையை வெளிப்படுத்த முற்பட்ட வேளையில், நான் கூறிய கருத்துக்களானவை, விடுதலைப் புலிகள் தனிநாட்டுக்காக போராடவில்லை என தவறாக அர்த்தப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. தெளிவற்ற வகையில் அந்தக் கருத்து வெளிவந்தமைக்காக நான் மனம் வருந்துகின்றேன். அதன் காரணமாக மனவேதனைக்கும், மன உளைச்சலுக்கும் உள்ளான தமிழ்த் தேசியபற்றாளர்களிடம் நான் மன்னிப்புக்கோருகின்றேன்.

*1948 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் ஜனநாயக வழியில் முன்வைத்த உரிமைக் கோரிக்கைகளை சிறீலங்கா அரசு நிராகரித்ததை மட்டுமன்றி தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையை தீவிரப்படுத்தியதன் விளைவாக தமிழீழ தனியரசை உருவாக்கும் போராட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இறுதிவரை உறுதியாக முன்னெடுத்து வந்தார்கள்.*

விடுதலைப் புலிகள் தமிழீழத்திற்காக போராடி வந்த நிலையில் அரசுடன் நேரடியாக இடம்பெற்ற பேச்சுக்களிலும் சர்வதேச மத்தியஸ்தத்துடன் இடம்பெற்ற பேச்சுக்களின்போதும் தமிழ்த் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கக்கூடிய தீர்வை அரசுத்தரப்பு முன்வைத்தால் பரிசீலிக்கத் தயார் என்பதனை வெளிப்படுத்தி இதய சுத்தியுடன் செயல்பட்டு வந்தார்கள். அதன் ஒரு கட்டமாகவே இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைவு முன் வைக்கப்பட்டது. அவ்வாறு விடுதலைப் புலிகள் தயாராக இருந்தபோதும் சிறீலங்கா அரசு எந்தவொரு தீர்வையும் வழங்கத் தயாரில்லாத நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரிவினையை தவிர வேறு எதனையும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்ற விசமத்தனமான பிரசாரத்தை சர்வதேச அளவில் முன்னெடுத்தது.

அவ்வாறு அரசு பொய்ப் பிரசாரத்தை முன்னெடுத்தபோது, அரசின் சதிகளையும், சூழ்ச்சிகளையும் மூடி மறைத்து, அனைத்துப் பழியையும் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அரசு சுமத்துவதற்கு இன்று 13ஆம் திருத்தத்தை கூட்டாக வலியுறுத்தும் தரப்பிலுள்ளவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அதனை வாய்ப்பாக பயன்படுத்தி தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நடைமுறைச் சாத்தியமான தீர்வைக் காண்பதற்கு விடுதலைப் புலிகள் இடையூறாக உள்ளார்கள் என்று கூறி ஸ்ரீலங்கா அரசு எமது மக்கள் மீது இனவழிப்பு யுத்தத்தை முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகம் பூரண ஆதரவு வழங்கியது.

அதன் விளைவு எமது மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், எமது உரிமைக்கான நீதிக்கான விடுதலைப் புலிகளது ஆயுதப் போராட்டமும் மௌனிக்கப்படவே வழிவகுத்தது. போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும் இன்று வரை, அரசு தமிழ் மக்களுக்கு எதனையும் தருவதற்குத் தயாரில்லாத போதும், இத் தரப்பினர் புலிகள் தனி நாட்டைத் தவிர வேறு எதனையும் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லாமையாலேயே அழிக்கப்பட்டார்கள் என்றும் இருப்பதனையும் தவறவிடக்கூடாதென்றும் கூறி மக்களை தோல்வி மனப்பான்மைக்குள் தள்ளும் நடவடிக்கையில் கடந்த 13 ஆண்டுகளாக ஈடுபட்டுவந்திருந்தார்கள்.

தற்போது, ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் மிகப் பலமாக இருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தாலேயே எதனையும் அடைய முடியவில்லை என்றும், முடிந்தவரை அவர்கள் போராடி விட்டார்கள் என்றும் கூறி முதலைக் கண்ணீர்விட்டவாறு இருப்பதனையும் விட்டுவிட்டு என்ன செய்வது அதனால் 13ஆம் திருத்தத்தையாவது இறுக்கிப் பிடித்திருக்க வேண்டுமென்று கூறி மக்களை ஏமாற்றி தமிழ் அரசியலை 13இற்குள் முடக்கி தமிழர்களது உரிமைப் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க சதி செய்கின்றார்கள் என்பதனை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## 13ஐ கோரும்...

நேர்காணல் நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே 13ஐ எதிர்க்கிறீர்கள் ஏன்? என்ற கேள்விக்கு பதிலளித்தபோதே சிறீதரன் எம். பி., "நான் மட்டுமே 13ஐ எதிர்க்கவில்லை. சம்பந்தன் ஐயாகூட ஆரம்பத்திலிருந்தே 13ஐ எதிர்த்தார். சவப்பெட்டிக்கு இறுதி ஆணியும் அடித்து அதனை நாம் அனுப்பி விட்டோம் என்று 13 பற்றி 2000 ஆண்டுகளில் சம்பந்தன் ஐயா சொல்லியிருந்தார். 1987இல் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோருடன் சம்பந்தன் ஐயாவும் 13ஐ ஏற்கவில்லை. 2008 தேர்தலிலும் பங்கேற்கவில்லை.

13ஆவது திருத்தச் சட்டம் சர்வதேச ஒப்பந்தம் என்பதாலேயே சாகாமல் இருக்கிறது. நாட்டுக்குள் எழுதப்பட்ட டட்லி - செல்வா, பண்டா - செல்வா, ரணில் - பிரபாகரன் ஒப்பந்தங்களுக்கு எல்லாம் என்ன நடந்தது என்று எல்லோருக்கும் தெரியும். சுதுமலை பிரகடனத்தின் போது தலைவர் பிரபாகரன் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தமக்கு படிக்கத் தரவில்லை என்றும் வாசித்தே காண்பிக்கப்பட்டது எனவும் கூறியிருந்தார். அவர் அதனை ஒருபோதும் ஏற்கவில்லை. சம்பந்தன் ஐயாவும் எதிர்த்தே வந்தார்.

எனினும் எந்தக் காரணத்துக்காக? ஏன் சம்பந்தன் ஐயா இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் கையொப்பம் வைத்தார் என்பது அதிசயமாக இருக்கிறது.

இந்தக் கடிதத்தில் கையொப்பமிட முன்னர் அரசியல் குழு கூட்டத்தை கூட்டி முடிவு எடுப்போம் என்று மாவை சேனாதிராசாவிடம் கேட்டேன். கதைப்போம்.. கதைப்போம்.. என்று பிற்போட்டுவிட்டு அவர் சென்று கையொப்பமிட்டு விட்டு வந்துவிட்டார். இதன் பின்னால் என்ன சக்தி இருக்கிறது என்று தெரியாது. அவர்கள் வெருட்டப்பட்டார்களா? (மிரட்டப்பட்டார்களா) அல்லது யாராவது ஏதும் சொன்னார்களா? என்று தெரியாது. அவர்கள் தலைமை மட்டம் என்ன நடந்தது என்று தெரியாது - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நிகழ்ச்சி தொகுப்பாளர் "அப்படியானால் நீங்கள் இதுபற்றி பின்னர் கேட்கவில்லையா?", என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த சிறீதரன் எம்.பி. "கையொப்பமிட்ட பின்னர் நான் சம்பந்தன் ஐயாவை சந்திக்கவில்லை. பாராளுமன்ற தேர்தல் முடிவடைந்த பின்னர் இரண்டுமூன்று சந்தர்ப்பங்களே நாம் சந்தித்தோம். இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் அவர் கையொப்பமிட்ட பின்னர் மத்திய குழு கூட்டத்திலும் சம்பந்தன் ஐயா பங்கேற்கவில்லை. தலைவர்களை நான் பொது வெளியில் விமர்சிக்க விரும்பவில்லை - என்றார். (ஐ)

## தமிழீழ விடுதலை...

டான் தமிழ் ஒளியில் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஒளிபரப்பான எது சரி எது பிழை நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்த நிகழ்ச்சியில் ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரனும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது நிகழ்வில் பங்கேற்ற ஒருவர் 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் ஆக்குவதற்கே புதிய அரசியலமைப்பு சாசனம் வருகின்றது. அதை எதிர்ப்பது தவறானது என்ற கருத்தில் கேள்வியை எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விக்கு சுரேஷ் பிறேமச்சந்திரன் பதிலளித்தபோது, "2009 வரை தனி நாட்டுக்கான யுத்தம் ஒன்று நடக்கிறது. தனி நாட்டுக்கான யுத்தம் நடக்கும்போது எல்லோருக்கும் ஒரு எதிர்பார்ப்பு இருந்தது." என்று கூறிக்கொண்டிருந்தபோது குறுக்கிட்ட கஜேந்திரன் எம். பி. "தனிநாட்டுக்கான யுத்தம் அல்ல தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்கான யுத்தம்.", என்றார். அத்துடன், "இவர்கள் (சுரேஷ்) அரசாங்கம் புலிகளை அழித்ததை சரியென்று சொல்லப் பார்க்கிறார்", என்றும் கூறினார்.

ஆனால், இதை மறுத்த சுரேஷ் பிறேமச்சந்திரன், "தமிழ்த் தேசத்துக்கானது அல்ல தனிநாட்டுக்கான யுத்தம். தமிழீழத்துக்கான யுத்தமே அது", என்றார். மீண்டும் மறுத்த கஜேந்திரன்,"போராட்டத்தை பிழையாக காட்டக்கூடாது. தேச அங்கீகாரத்துக்கான போராட்டமே அது. பேச்சு மேசையில் எந்த ஓரிடத்திலும் தனியரசு குறித்துப் பேசவில்லை.", என்றார்.

இதன்போது சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் மகுடவாசகமான "புலிகளின் தாகம் தமிழீழ தாயகம் என்பதைக் குறிப்பிட்டு, "தமிழீழத்துக்கான போராட்டமே அது. - தனி நாட்டை எதற்காகவும் புலிகள் விட்டுக் கொடுக்கவில்லை. பிரபாகரன் எதற்காகவும்விட்டுக் கொடுக்கவில்லை. இறுதி வரை அதனை விட்டுக்கொடுக்கவில்லை. 34 வருடப் போராட்டம் - என்றபோது எல்லோருக்கும் ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. தனி நாட்டை அடையாவிட்டாலும் அதி உச்சப் பகிர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருந்தது", என்று கூறினார்.

மேலும், எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை 6 மணிக்கு ஒளிபரப்பாகவுள்ள எது சரி எது பிழை நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகவுள்ள பகுதியில் கஜேந்திரன் பின்வருமாறு கூறுகின்றார்.

*"தனி நாட்டுக்கு போராடினார்கள் என்று முடிக்கப் பார்க்கிறார். (சுரேஷ்) இதன் மூலம் அரசாங்கம் அவர்களை அழித்தது சரியென்று சொல்லப்பாரக்கிறார். விடுதலைப் புலிகள் பேச்சு மேசையில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தீர்வை முன்வைத்தால் பரிசீலிக்கத் தயார் என்று*

## பணிப்...

னக் கடமைகளை அவர்களின் விமான அட்டவணைக்கு அமைய மட்டுமே செய்வார்கள் என்றும் குறிப் பிட்டார்.

மேலும், அங்கிகரிக்கப்பட்ட வருடாந்த விடுமுறை மற்றும் பொது விடுமுறை நாட்களில் விமானிகள் கடமைகளைச் செய்யமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானங்களை ஒழுங்காக இயக்குவதற்கு போதுமான விமானிகளை நியமிக்கவில்லை என்றும் பேச்சாளர் சுட்டிக்காட்டினார். எனவே, விமானிகள் பற்றாக்குறையை நிரப்புவதற்காக வருடாந்த விடுமுறை மற்றும் பிற விடுமுறை நாட்களில் கூட எந்தவித தயக்கமும் இல்லாமல் இது வரை கடமைக்கு சமுகமளித்துள்ளனர்.

தற்போது அதிகரித்துள்ள பயணிகளின் வருகையால் விமான நிறுவனம் இலாபம் ஈட்டி வரும் நிலையில், விமானிகளின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வை வழங்காததமையை சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிர்வாகம் நியாயப்படுத்த முடியாது என்றும் அவர் கூறினார்.

விமானிகளின் பிரச்னைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்காத வரை தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என சிரேஷ்ட பேச்சாளர் மீண்டும் வலியுறுத்தினார். (ஐ)

உலகம் முழுவதும் போய் வந்தார்கள். தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்கான தீர்வையே அவர்கள் எதிர்பார்த்தார்கள். இவர்கள் புலிகள் தனி நாட்டைக் கேட்டு எல்லாப் போராட்டமும் நடந்தது. ஆனால், எதுவும் நடக்கவில்லை என்று ஏன் கூற வருகிறார். இனித் தருவதைஏற்றுக் கொள்வோம் என்று 13ஐ ஏற்றுக்கொள்வோம் என்கிறார்கள். புதிய அரசமைப்பு வரும்போதுதான் தீர்வை ஏற்றுக்கொள்ள முடியும். கேட்க வேண்டியதை அப்போதுதான் கேட்க முடியும் - என்றார்.

கஜேந்திரன் - சுரேஷ் பிறேமச்சந்திரன் பங்கேற்ற எது சரி? எது பிழை? நிகழ்ச்சியை எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு டான் தமிழ் ஒளியில் காணமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொரோனாவுக்கு...

வயதுக்குட்பட்ட வர்களில் 2 ஆண்களும், 30 தொடக்கம் 59 வயதுப் பிரிவினரில் 5 ஆண்களும், 3 பெண்களுமாக 8 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 13 ஆண்களும் 8 பெண்களுமாக 21 பேரும் உயிரிழந்தனர். இதனால், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 808ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## சுகாதார,...

அதிகாரங்களின் அடிப்படையில் இந்த சேவைகள் அனைத்தையும் அவர் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். (ஐ)

## பயங்கரவாத...

அமைப்புக்களின் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தின் பிரதித் தலைவர் ஹெய்டி ஹொற்றாலா மற்றும் உறுப்பினர் ஹனா நியூமன் ஆகியோர் அவர்களது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில், "பொய்யான குற்றச்சாட்டுக்களில் பயங்கரவாத தத்தடைச்சட்டத்தின்கீழ் 22 மாதங்கள் சிறைப்படுத்தப்பட்டிருந்த மனித உரிமைகள் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பிணையில் விடுவிக்கப்பட்டமையை வரவேற்கின்றேன்.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கலில் அவதானத்திற்குரிய முக்கிய காரணியாக இருக்கின்ற பயங்கரவாதத்தடைச் சட்டத்தின்கீழ் இடம்பெறும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் கண்டனத்தை வெளியிட்ட மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய ஒன்றியப்பாராளுமன்ற உபகுழுவிற்கும் ஐரோப்பிய ஒன்றிய - இலங்கை கூட்டு ஆணைக்குழுவிற்கும் நன்றி கூறுகின்றேன்" என்று தெரிவித்துள்ளனர்.

## ஜெனிவாவில்...

வுள்ள இந்தப் புதிய பிரேரணைக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பலவும் மேற்குலக நாடு கள் சிலவும் ஆதரவைத் தெரிவித்துள்ளன எனவும் அந்தத் தகவல்கள் குறிப்பிடுகின் றன.

இவ்வாறான நிலையில் ஜெனிவாவில் ஏற்படக் கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு அரசு பல்வேறு வியூகங்களை வகுத்து வருகின்றது.

இதனடிப்படையில் ஜெனிவா அமர்வுக்கு முன்னர் முக்கிய சில ஐரோப்பிய நாடுகளுடன் கலந்துரையாடலை முன்னெடுக்க வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தீர்மானித்துள்ளார். இந்தக் கலந்துரையாடல்களுக்குச் சில நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன என வெளிவிவகார அமைச்சின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

அண்மைய இந்திய விஜயத்தைப் போன்று குறிப்பிட்ட சில ஐரோப்பிய நாடுகளுக்கு ஜெனிவா அமர்வுக்கு முன்னர் விஜயம் செய்தல் அல்லது மார்ச் மாதம் 3 ஆம் திகதி இலங்கை குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் குறித்த நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து ஒத்துழைப்புகளை பெற்றுக் கொள்ளல் போன்ற வழிமுறைகள் குறித்து இலங்கையின் இராஜதந்திர பணிக் குழாம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

ஈழநாடு
Eelanadu

# எரிபொருள் விலையேற்றம் இன்னமும் தீர்மானமில்லை!

## வலுசக்தி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, பெப். 14**

**எரிபொருளின் விலையை அதிகரிப்பது குறித்து இதுவரையில்எவ்விததீர்மானமும்எடுக்கப்படவில்லை. எரிபொருள் விலை சூத்திரம் தொடர்பிலான அமைச்சரவை பத்திரம் இன்னும் அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருளின் விலையை அதிகரித்துள்ளதை தொடர்ந்து பெற்றோலிய கூட்டுத்தாபனமும் எரிபொருளின் விலையை அதிகரிக்க வேண்டும் எனவும் விலை அதிகரிக்காமல் இருப்பதனால் ஒரு லீற்றர் டீசல் விற்பனையின் போது 50 ரூபாய் நட்டத்தையும்,ஒரு லீட்டர் பெற்றோல் விற்பனையின் போது 16 ரூபா நட்டத்தையும் கூட்டுத்தாபனம் எதிர்க்கொள்கிறது.

இவ்வாறான பின்னணியில் எரிபொருளின் விலையை அதிகரிக்க வேண்டும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க கடந்த 7ஆம் திகதி நிதியமைச்சிடமும்,வலுசக்தி அமைச்சிடமும் வலியுறுத்தினார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் விடுத்த கோரிக்கை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் வலுசக்தி அமைச்சர் உதயகம்மன்பில மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

எரிபொருளின் விலையை அதிகரிக்குமாறு பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் நிதியமைச்சிடம் வலியுறுத்தியுள்ளார். ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருளின் விலையை அதிகரித்துள்ளதை தொடர்ந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் எரிபொருளின் விலையை அதிகரிக்க தீர்மானிக்கவில்லை.விலை அதிகரிப்பு குறித்து எவ்வித பேச்சுகளும் இது வரையில் முன்னெடுக்கப் படவில்லை.

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலைமையில் தேசிய மட்டத்தில் எரிபொருளின் விலையை அதிகரிக்காமல் இருப்பது பாரிய நெருக்கடி நிலைமையினை ஏற்படுத்தியுள்ளது. நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நெருக்கடி நிலைமையை முகாமைத்துவம் செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

எரிபொருள் விலை சூத்திரம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என வலுசக்தி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

எரிபொருள் விலை சூத்திரம் தொடர்பிலான அமைச்சரவை பத்திரத்தை எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன் என்றார்.

ரஷ்யாவிற்கும்,உக்ரேனுக்கும் இடையிலான பதற்ற நிலைமை மற்றும் அமெரிக்க மத்திய பரிவர்த்தனையினால் வட்டி வீதம் அதிகரித்தல் ஆகியவற்றினால் உலக சந்தையில் எரிபொருளின் விலை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி ப்ரெண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 3.3 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட் டுள்ளது அதற்கமைய ஒரு மசகு எண்ணெய் தாங்கியின் தற்போதைய விலை 94.44 அமெரிக்க டொலர்களாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்க முடிவு

கொழும்பு, பெப். 14

உள்ளூராட்சி மன்றங்களின் தற்போதைய பிரதிநிதிகளின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன்,

விகிதாசாரம் மற்றும் தொகுதிவாரி தேர்தல் முறைமையிலான கலப்பு தேர்தல் முறைமையில் உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல் சட்டத்தை மறுசீரமைப்பது தொடர்பில் தேர்தல் முறைமை தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு அவதானம் செலுத்தியுள்ளது.

அதற்கமைய 60சதவீத பிரதிநிதிகளை விகிதாசார தேர்தல் முறைமையின் அடிப்படையிலும், 40 சதவீத பிரதிநிதிகளை தொகுதிவாரி தேர்தல் முறைமையின் கீழ் தெரிவு செய்வது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

தேர்தல் முறைமை மற்றும் தேர்தல் சட்டம் மறுசீரமைப்பு தொடர்பில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவு குழு கடந்த வாரம் கூடியபோது இவ்விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் நோக்கில் சகல அரசியல் கட்சிகளின் வேட்பு மனுக்களிலும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்குவது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களின் தற்போதைய பிரதிநிதிகளின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற தேர்தலுக்கும் மாகாண சபைத் தேர்தலுக்கும் தற்போது அமுலிலுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறை,விருப்பு வாக்கு முறை ஆகியன பற்றிய பொது மக்களின் நம்பகத்தன்மை வெகுவாக குறைவடைந்துள்ளன.

விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை மற்றும் விருப்பு வாக்கு முறைமை ஆகியவற்றில் காணப்படும் குறைப்பாடுகளை கருத்தில் கொண்டு கலப்பு விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை மிகச்சிறந்த தேர்தல் முறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது என தேர்தல் முறைமை தொடர்பில் ஆராயும் பாராளுமன்ற தெரிவு குழுவிடம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு யோசனை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அம்பாறையில் கடும் மழை; 3000 ஏக்கர் வயல்கள் நாசம்!



அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழையால் அறுவடை செய்யப்படவிருந்த நிலையிலிருந்த சுமார் 3 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இறக்காமம், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை மற்றும் நாவிதன்வெளி ஆகிய பிரதேசங் களை சேர்ந்த வயல்களே இவ்வாறு வெள்ளத்தால் அழிவடைந்துள்ளன.

வேளாண்மைகள் நிலத்தில் விழுந் துள்ளதால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ள தாகவும், தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் அறுவடை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டனர். (ஐ)




# யானைகளின் தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, பெப். 14

யால தேசிய விலங்குகள் சரணாலயத்திற்குள் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிவரும் வாகனங்கள்மீதான யானைகளின் தாக்குதலை தவிர்ப்பதற்காக, வனஜீவ ராசிகள் திணைக்கள அதிகாரிகளுடனான நடமாடும் வாகனங்கள் இரண்டு ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதம்பிடித்துள்ள கெமுனு மற்றும் நந்திமித்ர ஆகிய யானைகள் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிவரும் வாகனங்களை தாக்கி வருவதாக திணைக்களம் குறிப்பிட் டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை குறித்த இரு யானைகளும் உள்நாட்டு பயணிகள் சென்ற 2 வாகனங்களை தாக்கியுள்ளன.

அத்துடன், மற்றுமொரு வாகனத்தையும் இரு யானைகளும் தாக்கியிருந்தன. இந்த நிலைமையை தவிர்ப்பதற்காக சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச்செல்லும் வாகனங்களின் சாரதிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# தொற்று சுகாதார விதிகளை மறந்தோருக்கு எச்சரிக்கை!

கொழும்பு, பெப். 14

மேல்மாகாணத்திற்குள் சுகாதார விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 6000 இற்கும் அதிகமான நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய 641 பொலிஸ் உத்தியோகத்தர்களினால், 3113 மோட்டார் சைக்கிள்களும், 1822 முச்சக்கரவண்டிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதேபோன்று 6265 நபர்களும், சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதோடு இவர்களில் 1178 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இவ்வாறான சோதனைகளை முன்னெடுத்து சுகாதார விதிமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# தொழிற்சங்க பிரதிநிதிகள்மீது அவமதிப்பு சட்டம் பாயலாம்!

## எச்சரிக்கிறார் ஜனாதிபதி சட்டத்தரணி



கொழும்பு, பெப். 14

நீதிமன்ற தடை உத்தரவுக்குகு புறம்பாக போராட்டத்தில் ஈடுபடும் சுகாதார தொழில் சங்கங்கள் நீதிமன்றத்தை அவமதிப்பதாக கருதி அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியும்.

தொழில்சங்க போராட்டத்தில் ஈடுப்படும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் எதிர்வரும் வாரம் நீதிமன்றிற்கு அழைக்கப்படுவார்கள் என ஜனாதிபதி சட்டத்தரணி யு. ஆர். டி. சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மருத்துவ சேவையை நெருக்கடிக்குள்ளாகும் வகையில் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுப்படுதல், மின் விநியோகத்தை திட்டமிட்டு தடைசெய்தல் ஆகிய செயல்பாடுகளை கருத்திற் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முதல் அமுலுக்கு வரும் வகையில் வைத்தியசாலை சேவை மற்றும் அதனுடன் ஒன்றிணைந்த தொழிற்சேவைகள் மற்றும் மின் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தியுள்ளார்.

தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுப்படும் தொழிற்சங்கங்கள் இவ்விடயத்தை கருத்திற் கொள்ள வேண்டும். மருத்துவ சேவைகள் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுப்படுவது முற்றிலும் தவறானது.

நீதிமன்ற தடையுத்தரவிற்கு புறம்பாக போராட்டத்தில் ஈடுப்படும் தொழிற்சங்கங்களுக்கு எதிராக பிறிதொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அவர்கள் எதிர்வரும் நாட்களில் நீதிமன்றிற்கு அழைக்கப்படுவார்கள்.

தொழிற்சங்கத்தினரின் நிலைப்பாட்டை நீதிமன்றம் முழுமையாக ஆராயும்.

தொழிற்சங்கத்தினர் முன்வைக்கும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக மாவட்ட நீதிமன்றால் நடவடிக்கை முன்னெடுக்க முடியும் - என்றார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பிரியாணி சென்னையில் ஒருநாள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்-நெல்லியடி குளம்கரை வீதி புனரமைப்பு தொடர்பில்



9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு